பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 03 வியாழக்கிழமை (20.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 328

# ஆளில்லாத வேவு விமானம் நெடுங்கேணியில் வீழ்ந்தது!

## புலிகள் சுட்டு வீழ்த்தினார்களா என்பது குறித்துச் சந்தேகம்

கிளிநொச்சி,ஒக்ரோபர்20

இலங்கை விமானப்படையிடம் கடைசியாக இருந்த ஆளில்லா வேவு விமானமும் நேற்றுத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நெடுங்கேணிப் பிரதேசத்தில் வீழ்ந்து நொறுங்கியது. இது விடுதலைப் புலிகளினால் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் என உயர் பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியா விமானத் தள ஓடுபாதையிலிருந்து கடைசியாகப் புறப்பட்ட இஸ்ரேல் தயாரிப்பு 'சுப்பர் ஹொக்' (Super Hawk) ரக ஆளில்லா வேவு விமானம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியுடன் கட்டுப்பாட்டுப் நிலையத்துடனான தனது தொடர்புகளை இழந்தது என்றும் -

வழமையான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது வீழ்ந்திருக்கலாம் என்றும் -



'சுப்பர் ஹொக்' ரக விமானம்

இலங்கை படை அதிகாரிகள் முதலில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவுக்குச் சென்றார் அநுரா

கொழும்பு, ஒக்.20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் எந்தவித பிரதிபலிப்பையும் வெளியிடாமல், ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வதைத் தவிர்க்கும் வகையில், வெளிவிவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.20

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கல்வியியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து கொழும்பிலுள்ள நோர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிராமஅலுவலர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஒக். 20

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர் ஒருவர் நேற்றுமாலை சுட்டுக்கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் கந்தன்குள கிராம உத்தியோகத்தர் வீரசிங்கம் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பூவரசம்குளம் வீதியில் தட்டன்குளம் வயல் வெளியில் இடம்பெற்றுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் உணர்வை வெளிப்படுத்தவே திருமலையில் தேசிய எழுச்சி மாநாடு!

### செய்தியாளர்களிடம் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

திருகோணமலை,ஒக்.20

தமிழ் மக்களின் ஏகோபித்த உணர்வை வெளிப்படுத்துவதற்காகவே திருகோணமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இவ்வாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலை, உவர்மலை, உட்துறைமுக வீதியில், கலாசார மண்டபத்துக்கு எதிராக அமைந்துள்ள இளைஞர் விளையாட்டு மைதானத்தில் (சிறுவர் பூங்கா) நடைபெறவுள்ள தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு குறித்த அறிக்கையை நேற்று ஊடகவியலாளர்களிடம் அவர் வழங்கினார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-



எதிர் வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள எழுச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு திருகோணமலை மாவட்ட மக்கள் மிகவும் ஆர்வமாகவுள்ளார்கள். தமிழ் பேசும் மக்களின் அனைத்துத் தரப்பினரும் இது விடயத்தில் ஆர்வமாக உள்ளனர். அத்தகைய

(16ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த வெளியிட்டிருப்பது தேர்தல் விஞ்ஞாபனமே அல்ல!

### அது அவரின் தனிப்பட்ட சிந்தனையே என்கிறார் ரணில்

கொழும்பு, ஒக்.20

'மஹிந்தவின் சிந்தனை' என்ற பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருப்பது ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனமல்ல. அது அவரின் தனிப்பட்ட சிந்தனையாகும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மருத்துவமனைப் படுகொலைகள் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவர்கள், தாதிகள், சிற்றூழியர்கள் உட்பட 21 பேரின் 18ஆவது நினைவுதின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த நினைவு நிகழ்வில் 21 பேரினது திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி இடம்பெறும். இறந்தவர்களின் நினைவாக 21 தீபங்களும் ஏற்றி வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் இடம்பெறும். அத்துடன், உயிரிழந்தோரின் ஆத்மசாந்திக்காக வைத்தியசாலை வளாகத்தில் அமைந்திருக்கும் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறும். (ஒ-15)

## சிங்களவர்-சிறுபான்மையினரை துருவப்படுத்துகின்ற முயற்சி இது!

### மஹிந்தவின் கொள்கைகளைச் சாடுகின்றார் ஹக்கீம்

கொழும்பு, ஒக்.20

தமிழ், முஸ்லிம் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை, அவர்களின் பூர்வீக வாழ்விடங்கள் ஆகியன குறித்தான எதுவித பிரக்ஞையும் இல்லாத அரசியல் தலைமைகளிடம் சிறுபான்மையினர் எதனை எதிர்பார்க்க முடியும்? பிரதமரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெற்றுக் கோஷங்களை தாங்கிய யோசனைகள் மட்டுமே.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் வீதிகளில் நின்றோர் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல்!

### சுதுமலைப் பகுதியில் நேற்றிரவு சம்பவம்

சுதுமலைப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் வீதிகளில் கும்பலாக நின்று பேசிக்கொண்டிருந்தவர்கள் மீது மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினர்.

சுமார் பத்திற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் உருமறைப்புச் செய்துவந்த இனந்தெரியாதவர்கள் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்றவர்கள்மீது தாக்குதல் நடத்தினர் என்றும் - இதன்போது கூட்டமாக நின்றவர்கள் சிதறி ஓடினர் என்றும் - இத்தாக்குதலின்போது பலர் காயமடைந்தனர் என்றும் - கூறப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் பதற்றநிலை தோன்றியதுடன் வீதிகளும் வெறிச்சோடின.

சுதுமலை பஸ்நிலையப் பகுதி மற்றும் ஆலயப்பகுதிகளில் நின்றவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-7)

## பிரதமர் மஹிந்தவின் கொள்கைகள் தீர்வு முயற்சியில் புதிய பிரவேசம்

### மெச்சுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக்.20

தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கைகள், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் புதிய பிரவேசமென்று ஜே.வி.பி. நேற்று மெச்சியது.

இலங்கை மன்றக் கல்லூரியில் ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார். அக்கட்சி

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஊடகவியலாளர் ம.நிமலராஜனின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுமாலை யாழ். ஊடக வளங்கள் பயிற்சிமையத்தில் இடம்பெற்றது. இதில் நாளேடுகளின் ஆசிரியப் பீடப் பிரதிநிதிகள் சுடரேற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் நிமலராஜனின் திருவுருப் படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதையும் ஊடக வளங்கள் பயிற்சிமையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மலரஞ்சலி செய்வதையும் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையுரையாற்றுவதையும் யாழ். ஊடகவியலாளர் சங்கத்தலைவர் வே.தவச்செல்வம் நினைவுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பகீதரன்)

# நிமலராஜன் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.20

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று மாலை 5 மணிக்குயாழ்.ஊடக வளங்கள்பயிற்சி மையத்தில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில்முதலில் நிமலராஜனின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் விமல் சுமாமிநாதன் அணிவித்தார்.

இதனையடுத்துமலர்வ ணக்கம், அக வணக்கம்என்பன இடம்பெற்றன. தலைமையுரையையடுத்து யாழ்ப்பாணத்தில் வெளியாகும் நாளிதழ்களின்ஆசிரியர்கள், ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நினைவுரை ஆற்றினார்கள். நிகழ்வின் நிறைவாக வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கப் பொருளாளர் ஏ.என்.எஸ். திருச்செல்வம் நன்றியுரை நிகழ்த்தினார். (ஓ-12)

# குடாநாட்டில் நேற்றுத் தொடக்கம் கல்விச் செயற்பாடுகள் வழமைக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.20

கல்வியாளர்கள் படுகொலைகளைக் கண்டித்துக் குடாநாட்டு மாணவர் சமூகம் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு நேற்றுமுன்தினம் முடிவடைந்தது.

இதனையடுத்து நேற்றுமுதல் உயர்கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் கல்விச் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம், யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோரின் பாடுகொலைகளைக் கண்டித்துக் கடந்த 13ஆம் திகதி முதல் குடாநாட்டில் அனைத்துக் கல்வி நிலையங்களினதும் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்து வந்தனர். இந்தப் பகிஷ்கரிப்பு நேற்றுமுன்தினம் முடிவுற்றது.

இதேவேளை, பாடசாலை அதிபர்களின் படுகொலைகளைக் கண்டித்து யாழ். மத்திய கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்கள் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். (ஓ-12-13)

# பண்டத்தரிப்பு சித்தவைத்தியசாலை சேவைகள் ஸ்தம்பிதம்

வலி.தென்மேற்கு,ஒக்.20

வலி.தென்மேற்குப் பிரதேச சபையினால் பண்டத்தரிப்பில் நடத்தப்பட்டுவரும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் மருத்துவசேவை நடைபெறாதிருப்பதால் இப் பகுதி நோயாளர்கள் வைத்திய சேவைகளைப் பெறமுடியாது சிரமப்படுகின்றனர். இவ்வருடம் மார்ச் மாதத்தில் இந்த வைத்தியசாலை திறந்துவைக்கப்பட்டது. இந்த வைத்தியசாலையில் பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பிரான்பற்று, வடலியடைப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் அதிகளவில் சிகிச்சை பெற்று வந்தன்ர். தற்போது இங்கு டாக்டர்கள் எவரும் பணியில் இல்லை. சிகிச்சைக்காக வரும் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் இதன்ால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சொல்கின்றனர்.

இதேவேளை - இவ் வைத்தியசாலைக்குப் புதிய டாக்டர்களை நியமித்து வைத்திய சேவையை மக்களுக்கு வழங்குமாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி மானிப்பாயிலுள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளரை கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ஓ-135)

# தேசவிரோதக் குழுக்களின் செயற்பாடு குறித்து மாணவர் அவதானமாக இருக்கவேண்டும்!

## தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.20

தேசவிரோதக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து மாணவர்கள் அவதானமாக இருக்கவேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவரும் யாழ். மத்திய கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் முதல்வரும் இணைந்து கையெழுத்திட்டு ஊடகங்களுக்கு 'அனுப்பிய அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டு மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்திவிடும் நோக்கில் திட்டமிட்டு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அதன் அடிவருடிகளும் செயற்பட்டுவருகின்றமையானது மென்மேலும் எம்மைச் சீண்டும் செயற்பாடாகவே உள்ளது. கடந்த வாரம் அடுத்தடுத்துப் பாடசாலை அதிபர்கள் இருவரை படுகொலை செய்ததன் ஊடாக தமது செயற்பாட்டை யாழ். குடாநாட்டில் மீண்டும் ஆரம்பித்துள்ள சிறிலங்கா புலனாய்வுத்துறையினரும் அதன் அடிவருடிகளும் தமிழர் தாயத்தின் கிழக்கில் ஏற்படுத்திய குழப்பநிலை போன்று யாழ். குடாநாட்டிலும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இதனைக் கண்டித்து யாழ். குடாநாட்டு மாணவர்கள் கடந்த வாரம் மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டமானது முடிவடைந்த நிலையில் மாணவர்களைக் குழப்பும் நோக்கில் தேசவிரோத குழுக்களினாலும் சில அடிவருடிகளாலும் வெளியிடப்படும் செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

மாணவர்களைக் குழப்புகின்ற இச் செயற்பாடுகளை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மாணவர்களாகிய நாம் இவ்வாறான குழப்பங்களை உருவாக்குகின்ற புல்லுருவிகளை இனங்கண்டு மிகவும் விழிப்பாக செயற்பட்டு எம் தேசத்திற்காகவும் தேச விடுதலைக்காகவும் ஒன்றாக குரல் கொடுப்போம் - என்றுள்ளது.

# தேங்காய் வீழ்ந்து இளம் பெண் காயம்!

சாவகச்சேரி,ஒக்.20

வீட்டு முற்றத்தைத் துப்புரவு செய்து கொண்டிருந்த பெண் மீது தேங்காய் வீழ்ந்தது. தென்மராட்சியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் 23 வயதான இளம் பெண் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஓ-31)

# யாழ். போதனா வைத்தியசாலையில் ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள், தாதியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தால் நேற்றுப் போதனா வைத்தியசாலையின் வைத்திய சேவையில் பாதிப்பு ஏற்பட்டது.

நோயாளர்கள் பலர் சிரமங்களை எதிர் நோக்கினர்.

எனினும், நோயாளர்களின் நலன் கருதி அத்தியாவாசிய சேவைப் பிரிவுகளில் ஊழியர்களின் சேவைகள் இடம்பெற்றன.

சமயாசமய ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளித்திருந்தனர்.

சம்பள அதிகரிப்பு, பணிநிரந்தரம் ஆகியவை சம்பந்தமான கோரிக்கைகளை முன்வைத்துச் சுகாதார சேவை தொழிலாளர் ஒன்றியத்தால் நாடு முழுவதும் நேற்றுமேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாகவே யாழ். போதனா வைத்தியசாலையிலும் இந்த அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. (ஓ-15)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகியிருந்தன. பாடசாலை ரீதியாகக் கிடைத்த முடிவுகள் தொடர்ந்து உதயனில் வெளியாகவுள்ளன. முற்கொண்டு எமக்குக் கிடைத்த சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:-

**சங்கானை சிவப்பிரகாச ம.வி.**

கிருபாகரன் விதுஷா (144), செல்வகுமார் அனோயன் (138), தேவராசா பவரூபன் (128).

**அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி**

கோகுலா சடகோபன் (141), அபிராமி ஞானலிங்கம் (131), விந்தியா மகேஸ்வரன் (129).

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

தெய்வேந்திரம் சும்சனா (126), நாகலிங்கம் பிரியங்கா (126).

**ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.**

சுபேகா கமலநாதன் (141), சிவானந்தம் பிரதீபன் (131) ஆரணி திருஞானசம்பந்தர் (129), யசோதரா பாலசுப்பிரமணியம் (125).

**புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை**

கஜீபா தில்லைநாதன் (144), பத்மநாதன் கஜீபன் (140), முரளி நவரட்ணகஜன் (128).

**புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**

த.பதுஜா (137), மா.கஜானி (134), ஜெ.கிருசிகா (134), கு.மயூரதி (129), கி.திவாகரன் (129), ச.நவகீரதன் (128).

**தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி**

தே.ராகுலன் (149), சி.கிரிசுதன் (144), வி.சுவேதா (128).

**நல்லூர் ஆனந்த வித்தியாலயம்**

ஜெயரஞ்சன் சுஜீவ் (158).

**கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**

வி.சுஜீபன் (150), ம.சிதரன் (150), சு.கஜேந்திரகுமார் (144), இ.மயூரன் 143), ஜெ.ஆரூரன் (143), க.சதுர்சன் (141), கா.சௌயா (141), இ.சாலுஜா (138), கி.சியானி (138), மோ.கபிலன் (138), கா.அனுஜன் (137), ச.தர்சிகா (137), ஜெ.மதுஷிகன் (137), தே.சத்தியன் (137), தி.விதுஜா (135), சி.சாகித்யன் (135), ச.கல்பனா (134), து.கார்த்திகா (134), லோ.வேணிகா (134), இ.இளரமணன் (134), வி.வினோதினி (134), த.கீர்த்திகன் (133), இ.ரமணன் (133), வ.ரேணுகா (131), க.கிருஷ்டிகா (131), வி.சுலோஜன் (130), க.கௌதமி (130), அ.துளசிகா (127), தி.பிரியந்தனா (125), இ.அபிநயன் (125), செ.பிரணவன் (124), கு.மதுஷா (124). (த-12-29-11-190)

# 'பசுந்தேசம்' பாடல் ஒலிப்பேழை நேற்று மன்னாரில் வெளியீடு

ஸ்ரீகுகனின் இசையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிய 'பசுந்தேசம்' பாடல் ஒலிப்பேழை, இசைத்தட்டு என்பவற்றின் வெளியீட்டு விழா நேற்று புதன்கிழமை மன்னார் ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட விவசாயச் சம்மேளனத் தலைவர் சீ.சௌந்தரராஜா ஏற்றினார்.

ஈகச் சுடரினை 2ஆம் லெப்ரினட் மாலதியின் தந்தை ம.பேதுருப்பிள்ளை ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றினார்.

மூத்த எழுத்தாளர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த தேவ.கருணாநிதி வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பசுந்தேசம் ஒலிப்பேழையின் வெளியீட்டுரையை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நிகழ்த்தினார்.

ஒலிப்பேழையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் கரிகாலன் வெளியிட்டு வைத்தார். தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார்.

முதற் பிரதியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணாவிடம் இருந்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புரையை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை, கா.வே.பஞ்சாட்சரம், தமிழ்க்கவி யாழவன், வேலணை சுரேஸ், பொன்காந்தன், பொலீகையூர் சிந்துதாஸன், தேவகருணாநிதி ஆகியோர் எழுதிய 11 பாடல்கள் இந்த ஒலிப்பேழையில் இடம்பெற்றிருக்கின்றன.

தமிழீழப் பிரதேசங்களின் பசுமை வளத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் பாடல்களாக இவை அமைந்திருக்கின்றன. அத்துடன் தமிழ் மக்களுடைய சில நாட்டாரியல் பாடல்கள் நவீன இசையமைப்போடு துள்ளிசைப் பாடல்களாக இதில் இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-204-352)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# 'மஹிந்தவின் சிந்தனைகள்' தமிழருக்குத் தரும் படிப்பினை

'மஹிந்தவின் சிந்தனை' வெளியாகிவிட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட எண்ணங்களாக இவை முன்நிறுத்தப்பட்டாலும், தென்னிலங்கைச் சிங்களத்தின் ஒரு தரப்புக் குரலாக - கருத்தாக - அது வெளிவந்திருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள், வாசுதேவ நாணயக்கார போன்றவர்களின் குழுக்கள் எனப் பல்வேறு கூட்டுக் கதம்பங்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாக 'மஹிந்தவின் சிந்தனை' முன்னிறுத்தப்படுகின்றது.

தென்னிலங்கை இப்போது இவ்விடயத்தில் இரண்டு அணிகளாகப் பிரிந்துள்ளது. ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் தலைமையிலான அணி. மற்றது பிரதமர் மஹிந்த தலைமையிலான ஆளும் தரப்பு அணி.

அதில் ஆளும் தரப்பின் கருத்தியலாக - நிலைப்பாடாக - 'மஹிந்தவின் சிந்தனை' என்ற இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தூக்கி நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் - தரப்புகளுக்கு இடையிலான பேச்சு முயற்சிகளில் - மீண்டும் ஆரம்ப இடத்துக்கே வந்து நிற்கின்றது மஹிந்த அணி.

இனப்பிரச்சினை விவகாரத்தில் அடிப்படை விடயங்களாக - தமது அபிலாஷைகளாக - நான்கு அம்சங்களைத் தமிழர் தரப்பு முன் நிறுத்தியிருந்தது.

தமிழர் ஒரு தனித் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்; அவர்களுக்குத் தனியான தாயகம் உண்டென்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்; எல்லாத் தமிழர்களினதும் அடிப்படை உரிமைகளும், குடியியல் உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும். - இவையே இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 1985 இல் - திம்புப் பேச்சுகளின்போது தமிழரால் முன்வைக்கப்பட்ட அடிப்படை விடயங்கள்.

இவற்றில் நான்காவது விடயம் மட்டுமே அப்போதைய ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பின்னர் 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம், தமிழர் தனித்தேசிய இனம், அவர்களுக்கென பூர்வீகத் தாயகம் உண்டு என்ற முதலாம், இரண்டாம் அம்சங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

தமிழினத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பது 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிக்கு இணங்கியதன் மூலம்' 2002 ஆம் ஆண்டின் ஒஸ்லோ அறிவிப்பின்படி இலங்கை அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால், அந்தக் கடந்தகால இணக்கங்கள், உடன்பாடுகளை எல்லாம் தூசெனத் தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் ஆரம்ப இடத்துக்கு - 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற நிலைக்கு - வந்து நிற்கின்றார் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜ பக்ஷ.

'ஒற்றையாட்சி முறைக்குள்தான் தீர்வு; தமிழருக்கு சுயநிர்ணய உரிமை கிடையாது; தமிழர்களின் தனித்தாயகக் கோட்பாடும் ஏற்கப்படமாட்டாது; ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு உடன்பாடும் கைவிடப்படுகிறது' - என்றெல்லாம் 'மஹிந்தவின் சிந்தனை' பேரினவாதப் போக்கில் செல்வது, காலங்காலமாகத் தான் புதைந்துள்ள பௌத்த - சிங்கள மேலாண்மைவாதக் கருத்தியலில் இருந்து தென்னிலங்கைச் சிங்களம் மீண்டுவராது என்பதை மீளவும் உறுதி செய்திருக்கின்றது.

மஹிந்தவுக்கு பின்னால், பேரினவாத மேலாண்மைப் போக்கு சக்திகள் எல்லாம் ஒன்று திரண்ட நிலையில் -

கடந்த காலத்தில் அமைதித் தீர்வுக்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின்போது எட்டப்பட்ட முடிவுகளை எல்லாம் அடியோடு தூக்கிக் கடாசி நிராகரிக்கும் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பது ஈழத் தமிழர்களுக்கும், சர்வதேசச் சமூகத்துக்கும் மீண்டும் ஒரு படிப்பினையைத் தந்திருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - பேச்சு மூலம் ஓர் இணக்கத் தீர்வு எட்டப்பட்டாலும் -

அத் தீர்வு நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கினாலும் -

எந்தச் சந்தர்ப்பத்திலும் பேரினவாதம் மீள உயிர்கொண்டெழுந்து அந்தத் தீர்வுகளை நாசமாக்கிவிட்டுத் தனது அடக்குமுறைப் போக்கை - ஒடுக்குமுறை நடவடிக்கையை - மேலாண்மைவாத அதிகாரத்தை - சிறுபான்மை இனத்தவர்கள்மீது அழுத்தமாகப் பிரயோகிக்கத் தயங்காது என்பதுதான் அந்தப் படிப்பினை.

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்ற விடாப்பிடி நிலையை - அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமளிக்காத நெருக்குவார நிலைப் பாட்டை - கொண்டுள்ள தென்னிலங்கைச் சிங்களத் தலைமையுடன் கலந்துரையாடல் மூலம் தீர்வு காண்பதற்கு தமிழர் தரப்புக்கு எதுவும் இல்லை - வாய்ப்பு ஏதும் கிடையாது - என்பதுதான் கசப்பான உண்மையாகும்.

இத்தகைய மேலாண்மைப் போக்கு நிலைப்பாடுடைய ஒரு தரப்பை தமது வாக்குகள் மூலம் தமது பிரதிநிதியாக - அரசுத் தலைவராக - தென்னிலங்கை தெரிவு செய்யுமானால் அமைதி வழியில் - கலந்துரையாடல் மூலம் - தங்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் நீதியான தீர்வு ஒன்றைத் தாங்கள் பெறமுடியாது என்ற உறுதியான முடிவுக்குத்தான் தமிழர்கள் வரவேண்டியிருக்கும்.

அப்படி நேர்ந்தால் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக 'மயிலே! மயிலே! இறகுபோடு' என்று வாயால் கூறிக்கொண்டிருக்கும் பாணியில், செயலற்றுத் தமிழர் இருக்கமுடியாதநிலை ஏற்படும். மயிலிடம் இருந்து இறகைப் பிடுங்கி எடுப்பது போன்ற நிலைக்கே தமிழர்கள் தள்ளப் படுவார்கள்.

# சமூகத்தை நாசப்படுத்தும் கொலைகள்: இந்தப் போக்குக்கு முடிவுவேண்டும்!

## நீதி சமாதான ஆணைக்குழு பகிரங்க அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.20

தொடர்ந்து இடம்பெற்றுவரும் கொலைகள், வன்செயல்கள் எமது சமூகத்தை முற்றாக நாசமாக்குவதற்கு முன் அவற்றைத் தடுத்து நிறுத்த அனைவரும் முன்வர வேண்டும்.

-இவ்வாறு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு .

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் மனிதக் கொலைகள் தொடர்பாக நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வண.பிதா அ.இ.பேணாட் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

எமது சமுதாயம் என்னதிசையில், என்ன பாதையில் உருண்டுகொண்டு போகின்றது என்று சிந்தித்துச் செயற்படும்படி அனைவரையும் அழைக்கும் நோக்குடன் இந்தவரிகளை வரைகிறேன். குறிப்பாக, எமது மத்தியில் இடம்பெற்று வரும் கொலைகள், வேறு வன்செயல்கள் பற்றி நாம் சிந்தித்து செயற்பட வேண்டி உள்ளது.

கவலைக்குரிய இந்தப் போக்கு ஒரு பாரிய நச்சுவட்டமாக விரிவடைந்து, பல உயிர்களைச் சூறையாடி எமது சமூகத்தை நாசப்படுத்தும் முன்னே இது ஒரு முடிவுக்கு வரவேண்டும்.இந்த முடிவு தானாக வராது. நாம் ஈடுபட்டு முயற்சியெடுத்துத்தான் இதை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

1977 ஆம்ஆண்டு தென்னிலங்கையிலிருந்து யாழ்.பகுதிக்கு வருகைதந்த சமூக சேவைப் பெரியார்களின் குழுவிலிருந்த பெரியாரொருவர் "தமிழ் மக்களே , இளைஞர்களே, ஆயுதம் தாங்குபவர் களென்று நான் நம்பப்போவதில்லை" என்று சொன்னார்.

எமது சமூகம் அவ்வளவு தூரம் சாதுவானதாய் சமூகக் கட்டுப்பாட்டிலும் பண்பாட்டிலும் உயர்ந்திருந்தது. அவர் அதை நன்கு அறிந்திருந்தார்.

ஆம், போரும் ஆயுதக் கலாசாரமும் ஆரம்பிப்பதற்கு முற்பட்ட காலத்தில் எமது சமூகத்திலே ஒரு கொலை நடந்தாலே அது பெரிய எழுத்துகளில் தலைப்புச் செய்தியாக நாளிதழ்களில் பிரசுரிக்கப் படும். பல இடங்களிலும் பல நாள்களுக்கு அது புதினச் செய்தியாகவே பேசப்படும். அவ்வளவுக்கு அரிதாகவே கொலை இடம்பெற்றது.தொடர்ச்சியாக சில ஆண்டுகளிலே ஒரு கொலைகூட இடம்பெறாத காலப்பகுதியாக அது இருந்தது.

இப்போதைய நிலையைப் பார்க்கும் போது உயிர் எவ்வளவு மலிவாக மதிக்கப்படுகிறது.ஒவ்வொரு நாளும் தினத்தாள்களில் எதிர்பார்க்கக்கூடிய செய்தியாக கொலைகள் அதிகரித்து விட்டன.

எமது சிறிய சமூகத்தை ஒரு புறம் போர் அழித்தது.இன்னொருபுறம் ஆழிப் பேரலை அழித்தது.அது போதாதது போன்று நம்மையே நாம் அழித்துக் கொண்டிருக்கிறோமே.

இந்த நிலை ஏற்படுவதற்குப் பொறுப்பான காரணிகள் பல உள்ளன."இது இவையள்...அது அவையள்"என்று பார்க்காது "மனிதம்" என்ற அடிப்படையிலே காரணிகளும் முழுச்சமூகமும் இணைந்து இந்த நச்சுவட்டத்திற்கு மாற்றுவழி காணவேண்டும் இது மிகவும் அவசரமான ஒரு தேவையாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 2 ஆம் கட்டமாக 4 ஆயிரம் பேருக்கு வீடமைக்கும் பணி அடுத்த வருடத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிப்படைந்த வீடுகளை உலக வங்கியின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக புதிய வீடுகளை அமைத்து வழங்குவதற்காக 4 ஆயிரம் பயனாளிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இத்தகவலை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் - முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்த வீடுகள் உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக யாழ்.மாவட்டதின் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் ஆயிரத்து 635 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற் கெனப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீடமைப்புக் கொடுப்பனவுகள் 4 கட்டங்களாக வழங்கப் பட்டன.

முதற்கட்ட வீடுகளின் கட்டடப் பணிகள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருகின்றன. வெகுவிரைவில் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கின்றேன்.

அடுத்த கட்டமாக யாழ். மாவட்டத்தில் 4 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன. இவற்றுள் 10 வீதமான வீடுகள் யுத்தத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும்.

இதற்கான பயனாளிகள் தெரிவும், ஏனைய பணிகளும் அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் - என்றார்.

(ஐ-202-203)

**நாளை**

ஐப்பசி 4
வெள்ளிக்கிழமை
21.10.2005
திதி: சதுர்த்தி
பிற்பகல்: 4.09வரை
நட்சத்திரம்: ரோகிணி
முன்னிரவு: 6.55 வரை
சுபநேரம்: 06.02 - 07.32
ராகுகாலம்: 10.32-12.02
(யாவும் பழைய நேரப்படி)

# புலிகள் ஆதரவுக்கான தடையை எதிர்த்து அமெரிக்காவில் வழக்கு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட பூர்வ செற்பாடுகளுக்கு ஆதரவாகக் கூடாது என்று அமெரிக்காவில் விதிக்கப்பட்டிருக்கும் தடைக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

அமெரிக்காவிலுள்ள மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் தமிழ் அமைப்புகள் என்பன இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்யவிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட பூர்வ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவும் 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் சேவையாற்றுவதற்கும் அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அவசரகால பொருளாதார சட்டத்திற்குத் தடையாக இருக்கிறது.

அமெரிக்காவின் மீது 2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலின் பின், கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் புஷ் இந்த அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்.

அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பல்வேறு அமைப்புகளுடன் ஒகாலனின் குர்திஸ் விடுதலை அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பொருளுதவி மற்றும் சேவைகளை வழங்குவதனையும் இந்தச் சட்டம் தடைசெய்தது.

இத்தகைய சட்டத்தால் எந்தவொரு அமைப்பினதும் சட்டபூர்வ மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் அமெரிக்க குடிமக்கள் பாதிக்கப்படுவதாக ஆட்சேபனைகள் எழுந்தன.

இந்தநிலையில் அமெரிக்காவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் அமெரிக்க - தமிழ் அமைப்புகள் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கவும் புலிகளின் நிர்வாகப் பகுதியில் சேவையாற்றவும் தடையாக இருக்கும் இந்த 2001 ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்து வழக்குத்தாக்கல் செய்ய உள்ளன.


சட்டபூர்வ உரிமைகளுக்கான மையத்தினரால் இந்த வழக்குத் தொடரப்படவுள்ளது.

மற்றோர் அமெரிக்க தேசாபிமான சட்டமானது. ஒகாலனின் குர்திஸ்தான் விடுதலை அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சியளித்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் சேவையாற்றுதலைத் தடை செய்வதைச் சட்டபூவர்மற்றது என்று கடந்த ஜூலை மாதம் அமெரிக்க நீதிபதி ஒட்றி கொலின்ஸ் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ)

**உதயவாக்கு**

நேர்மையானவர் எவரும் தமது நேர்மைக்காக ஒரு போதும் வருந்தியதில்லை. தாமஸ் புல்லர்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வதிரி வடக்கு மெதடிஸ்
மிசன் தமிழ் கலவன் பாடசாலை
மாணவன்

**செல்வன் கமலநாதன் செந்துஜன்**

அவர்கள் 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந் தமையையிட்டு அவரையும் அவரை வழி நடத்தி ஊக்கமளித்த அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அருஞ்செல்வம் மாமா (அல்வாய்),
செல்வானந்தம் மாமா (சுவிஸ்),
சச்சிதானந்தம் மாமா (சுவிஸ்),
சபேசன் அண்ணா (லண்டன்).

'அருணோதயம்'
அல்வாய் வடக்கு
அல்வாய். (41694) (18-21-15-34)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.வண் / ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலய
மாணவன்
அலெக்ஸ்குமார் தம்பதியரின்
செல்வப் புதல்வன் செல்வன்

**ஜின்துஷன்**

அவர்கள் 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி யமையையிட்டு அவரையும் அவருக்கு கல்வியூட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட் டுக்களையும் தெரிவிப்பதோடு, மேலும் பல பட்டங்கள்பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
மாமா மோகன்,
கொழும்பு அப்பப்பா,
ரகுநாதன்

புது றோட்,
ஆறுகால்மடம். (41688)(42-11-18-16)



# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய விசேட பொதுச்சபை (உபயகாரர்) கூட்டம்

மேற்படி ஆலய பொதுச்சபைக் (உபயகாரர்) கூட்டம் 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஆலய எதிர்காலம் பற்றி ஆராய்ந்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதால் அனைத்து உபயகாரர்களும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(41687)(42-11-18-16) -தர்மகர்த்தா சபையினர்.





# தீபாவளி மலிவு விற்பனை!

சுபமுகூர்த்தப் பட்டு சாறிகள்.
பட்டுவேட்டி சால்வைகல்
சிறுவர்களுக்கான சூட், சேட் வகைகள்
அனைத்திற்கும் தரச்சிறப்பில்
முன்னணி பெற்ற ஒரே ஸ்தாபனம்.

**வளர்மதி புடைவை அகம்**

(176) 258, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.





# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 723 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 18-10-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4821054-4836269 |

லக்கினம் சிங்கம்

வெற்றி இலக்கங்கள்

**09 28 35 43**

ஜக்பொட் பரிசு
ரூபா. 40,50,250/-
வெல்லப்பட்டுள்ளது
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தம் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,34,053 | 10/- | 33,40,530/- |
| 2.இலக்கங்கள் | 30,677 | 20/- | 6,13,540/- |
| 1.இல லக்கினம் | 30,427 | 30/- | 9,12,810/- |
| 2.இல லக்கினம் | 2,789 | 100/- | 2,78,900/- |
| 3.இலக்கங்கள் | 829 | 500/- | 4,14,500/- |
| 3.இல லக்கினம் | 67 | 5,000/- | 3,35,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 40,50,250/- | 40,50,250/- |
| | | மொத்தம் | 1,02,45,530/- |
| [illegible] | 5 | 4,21,575/- | 10,52,250/- |
| [illegible] | | | 1,12,97,780/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,12,97,780/-

| | |
|---|---|
| [illegible] | 4823098-3-10 |
| [illegible] | 4823611-9-01 |
| [illegible] | 4824297-1-16 |
| [illegible] | 4828174-0-53 |
| [illegible] | 4821905-4-11 |


# அதிபர்கள் : கூட்டம்

தென்மராட்சி,ஒக்.20

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக் குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களைக் கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-31)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு சிறுவர் விடுதி

யாழ்ப்பாணம்,ஒக்.20

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு இரண்டுகோடி ரூபா செலவில் இரண்டு மாடிகளைக் கொண்ட சிறுவர் விடுதியினை எவ்.ஐ.டி.ஆர். என்ற ஜப்பானிய நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், ஜப்பானிய நிறுவனப் பிரதிநிதிகள், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், நலன்புரிச் சங்கத்தினர், கட்டடத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-7-31)

# விசர் நாயினால் கடியுண்டவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

மூன்று மாதங்களுக்கு முன் விசர் நாய் கடிக்கிலக்கான ஒருவர் விசர் நாய்க்கடிக்கான ஏ.ஆர்.வி.தடுப்பூசி மருந்தைப் போடத்தவறியமையினால் விசர்நாய்க்கடி நோய்க்காளாகி உயிரிழந்தார்.

அரியாலையைச் சேர்ந்த மார்க்கண்டு துஷ்யந்தன் (வயது -20) என்ற இளைஞனே மரணமானவராவார்.

விசர்நாய் கடித்தது என்பது தெரிந்தும் அதற்கான தடுப்பூசியை இருதடவை மாத்திரம் ஏற்றிவிட்டு அரைகுறையாக நிறுத்தியதால் இந்நிலை ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. திடீரென ஏற்பட்ட காய்ச்சல், முச்சுத்திணறலை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் மூன்று நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார். (ஐ-15)

# திருமறை கல்வித்தேர்வு

குருநகர்,ஒக்.20

யாழ்.மறைக் கல்வி நிலையத்தால் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் கத்தோலிக்க மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்வு எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரிய பாடசாலைகளில் நடைபெறும் என யாழ். மறைக்கல்வி நடுநிலையப் பணிப்பாளர் வண.பிதா ஜே.ஜே. மௌலிஸ் அடிகளார் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் சுமார் 15ஆயிரம் கத்தோலிக்க மாணவர்கள் இப் பரீட்சையில் தோற்றவுள்ளார்கள். இப் பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போதிலும் மாணவர்கள் மேற்கொண்ட பாடசாலை பகிஷ்கரிப்புக் காரணமாக பிற்போடப்பட்டது. (ஐ-51)

# சிறுமி மீது துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிப் பகுதியில் நேற்று சிறுமி ஒருத்தியை அயல்வீட்டு இளைஞர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோத்துக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக சிறுமியின் தந்தையால் யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சாயி சிந்தனை

## எல்லா இயக்கமும் இறைவனே!



ஒளி மிகுந்த விளக்கைக் காண நமக்கு வேறு தீப ஒளி எதுவும் தேவையில்லை. அதைப் போலவே ஒளி வீசும் ஆத்ம ஞானத்தை அறிந்துகொள்ள தனியாக வேறு எதுவும் வேண்டாம். ஒவ்வொரு மனிதனிடமும் இந்த ஆத்ம தத்துவம் நிறைந்திருக்கிறது. ஆனால் இந்தப் பெருமை மிக்க, ஆத்ம ஞானத்தை உணர முடியாததால்தான் மனிதன் வேறு வகையான அறிவைத் தேடிப் போகின்றான். படைப்பில் காணப்படும் மாறுபாடுகள் எல்லாம், நம் பார்வையில் தான் இருக்கின்றன. இந்த மாறுபாடு, வேறுபாடுகளுக்கு எல்லாம், அந்த ஒரே காரணம்தான்! நிரந்தரமற்ற எல்லாம், அடிக்கடி மாறும் எல்லாம், நிரந்தரமான தெய்வத்தைச் சார்ந்தே இருக்கின்றன. சிருஷ்டி முழு வதும் ஒரு நாடக அரங்கம். இதில் நடிப்பதும் இயக்குவதும் இறைவனே! எல்லா உருவங்களையும், வேடம் தாங்கி நடிப்பது அவரே! நீங்கள் காணும் உருவங்கள் எல்லாம் இறைவனின் வெவ்வேறு உருவங்களே எனப் புரிந்து கொள்ளுங்கள்! உங்களை யாராவது தூஷித்தாலோ அன்றி பாராட்டினாலோ, கடவுளே அதைச் செய் கிறார் என்று உணருங்கள்! இந்த உலகில் நடக்கும் நல்ல, தீய செயல்கள் அனைத்தும் அவரால்தான் ஏற்படுகன்றன. இந்த உண்மையை உணர்ந்து கொள்ள இயலாததால், மனிதன் தன்னை யாரோ தூற்றுகிறார்கள் என்று கோபப் படுகின்றான். இல்லையென் றால் போற்றுகிறார்கள் என ஆனந்தப்படுகிறான்! இல்லை! இல்லை! இந்த வேஷங்களை எல்லாம் பார்த்து நீங்கள் மோசம் போகக்கூடாது! எல்லா இயக்கமும் இறைவனின் செயற்பாடே! என்கிற உயர்ந்த சத்தியத்தை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும்!

ஆதாரம்: சனாதனசாரதி


# ஆங்கில வகுப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Spoken English -** Weekend 22.10.2005

**Diploma in English -** Weekdays 24.10.2005

**Ielts -** Weekdays 31.10.2005

(57445)

**LONDON ENGLISH COLLEGE**

NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180

No. 229A, Mitcham Road,
Tooting, London, SW 17910 UK



# MCS

324, Palaly Road, Jaffna.
(Near Alady Junction)

**Speed Batches**

- MS Office
- Accounting Package
- General Information Technology
- Cool 3D, Flash, Premiere, HTML, Maya
- Corel Draw, Page Maker, Photoshop
- Visual Basic, VB Net, Java
  - A+ Hardware Technician
  - Microsoft Certified Systems Engineer
  - Sun Certified Java Programmer

Microsoft, Sun Micro System Comptia நிறுவனங்களின் சான்றிதழ்கள்
Annual Income 65000$ - Salary Survey Microsoft
***********Supported by UNDP/JRRP***********


# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியலட்சுமி செல்லத்துரை



வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 122/12, நாலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதியை (நாவலர் கல்வி நிலையம் முன்பாகவுள்ள ஒழுங்கை) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி செல்லத்துரை அவர்கள் நேற்று 19.10.2005 புதன்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருதையினார் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - செல்லமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற மருதையினார் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மனோன்மணி, நாகரத்தினம், இராசையா, பூபதி, மகேஸ்வரி மற்றும் இராசம்மா, மார்க்கண்டு ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லாச்சி மயில்வாகனம், சுப்பிரமணியம், பொன்னையா, இராசேந்திரம் மற்றும் புனிதவதி, சுசீலாதேவி ஆகியோரின் மைத்துனியும் நடராசா (ஓய்வுபெற்ற அதிபர், யா/வேலணை ஐயனார் வித்தியாசாலை), யோகராசா (ஓய்வுபெற்ற மருந்தாளர்), அமரர் சௌந்திரராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தில்லையம்பலம் - செல்லமுத்து, தருமபாலு - குணலட்சுமி தம்பதிகளின் சம்பந்தியும் புவனேஸ்வரி, சிவசோதி (பிரதம எழுதுவினைஞர், யாழ்.மாநகர சபை) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கோமளாதேவி மற்றும் திரு.திருமதி இலங்கைநேசன் சியாமளா, ஜெயகரன் (கட்டடப் பொறியியலாளர்), திவாகரன் (மருந்தாளர்), சிவாகரன் (யாழ்.மருத்துவபீடம்), காலஞ்சென்ற யோதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஜந்தன், அபிலாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*122/12,நாலாம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*(நாவலர் கல்வி நிலையம் முன்பாக உள்ள ஒழுங்கை)*
*யாழ்ப்பாணம்.* (41684)(42-11-18-16)

*தகவல்:*
*செ.நடராசா*
*செ.யோகராசா*
*(மக்கள்).*

# சதாம் ஹுசேய்ன் தலை தப்புமா? விசாரணைகள் நேற்று ஆரம்பம்!

பாக்தாத் ஒக்.20

ஒரு காலத்தில் அவர் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையும் சட்டமானது. இன்று சட்டத்துக்குமுன் உயிர்ப் பிச்சை கேட்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேய்ன் மீதான விசாரணை நேற்றுத் தொடங்கியது. குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக் நாட்டில் சர்வாதிகார ஆட்சிபுரிந்தவர் சதாம் ஹுசேய்ன். 2003ஆம் ஆண்டு ஏப்ரலில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு படை ஈராக்மீது போர்தொடுத்து சதாம் ஹுசேய்னை ஆட்சியில் இருந்து விரட்டியது. உயிர் பிழைக்க தலைமறைவான சதாம் ஹுசேய்ன் அதே ஆண்டில் டிசெம்பர் மாதம் ஒரு பாதாள அறையில் பதுங்கியிருந்தபோது பிடிபட்டார். தற்போது அவருக்கு 68 வயதாகிறது.

பாக்தாத் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சதாம் மீதான விசாரணை சிறப்பு நீதிமன்றில் நேற்று ஆரம்பமாகியது. பல ஆண்டுகளாக பல கொடூரக் கொலைகளுக்கு அவர் காரணமாக இருந்துள்ளார் என்று அரச தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது. இது நிரூபிக்கப்பட்டால் ஈராக் நாட்டு சட்டப்படி அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும். ஒரு காலத்தில் சதாம் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையும் சட்டமாக அமுல்படுத்தப்பட்டது. தற்போது தனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படி போராட வேண்டிய நிலையில் அவர் இருக்கிறார்.

கடந்த 1982ஆம் ஆண்டு துஜெயில் என்ற கிராமத்துக்கு சதாம் ஹுசேய்ன் சென்றிருந்தபோது அவரைக் கொலை செய்யப் பலர் முயன்றனர். பாதுகாப்பு வீரர்களால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் கைதுசெய்யப்பட்டு விசாரணை நடத்திக் கொல்லப்பட்டனர். இந்த வகையில் துஜெயில் கிராமத்தைச் சேர்ந்த 143 ஷியா பிரிவு முஸ்லிம் மக்களின் படுகொலைக்கு சதாம் காரணமாக இருந்துள்ளார். இந்தப் படுகொலையில் சதாமுக்கு நேரடியாக தொடர்பு உள்ளதற்கு ஆதாரங்கள் உள்ளன. எனவே, தற்போது நடக்கும் விசாரணையின் முடிவில் மிகப்பெரிய தண்டனை அளிக்கப்படுவது நிச்சயம் என்று ஈராக் அரச தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1980ஆம் ஆண்டு ஈரான் நாட்டின் மீது சதாம் போர் தொடுத்தார். இது எட்டு ஆண்டுகள் நீடித்தது. அப்போது மனிதாபிமானத்துக்கு எதிரான பல கொடூரச் செயல்களை சதாம் ஹுசேய்ன் புரிந்துள்ளதாக மற்றொரு குற்றச்சாட்டு கூறப்படுகிறது. 1990 ஆம் ஆண்டு குவைத் நாட்டை பிடித்துவைத்துக்கொண்டு ஏழு மாதங்கள் ஈராக் அட்டகாசத்தில் ஈடுபட்டது. 1988 ஆம் ஆண்டில் குர்திஷ் பகுதியில் உள்ள ஹலாப்ஜா என்ற நகரில் விஷவாயு செலுத்தி 5 ஆயிரம் குர்திஷ் இன மக்களை கொலைசெய்தது ஆகிய குற்றச் சாட்டுகளும் சதாம் மீது கூறப்பட்டு வருகிறது. சம்பவம் நடந்த போது ஹலாப்ஜா நகர் அருகே ஈராக்- ஈரான் ராணுவ வீரர் களிடையே சண்டை நடந்துகொண்டிருந்தது. அப்போது ஈரான் தான் விஷ வாயுவை கசியவிட்டது என்று இந்தப் படுகொலைகளுக்கு சதாம் பதில் காரணம் கூறிவருகிறார். விசாரணையின் முடிவில் தான் சதாம் தலை தப்புமா என்பது தெரியவரும். (ஐ)


வழக்கு விசாரணைக்கு தயாராகியுள்ள சதாமின் தற்போதைய தோற்றம் இது.

## அமெரிக்காவை நோக்கி 'வில்மா' சூறாவளி நகருகிறது

வாஷிங்ரன், ஒக்.20

அமெரிக்காவின் மெக்ஸிக்கோ குடா மற்றும் புளோறிடா பகுதிகளைக் கடுமையாகத் தாக்கக்கூடிய சூறாவளியொன்று அத்திசையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

'வில்மா' என பெயர் கொண்ட இந்தச் சூறாவளி கியுபா மற்றும் மெக்ஸிக்கோப் பிரதேசங்களைச் அச்சுறுத்திக்கொண்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. அதுமேலும் வலுவடைந்து கரிபியன் ஊடாக வடக்கு நோக்கி நகரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தாழ்வான பிரதேசங்கள் கடும் மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

'வில்மா' 2ஆம் நிலை புயலாக மாறி மணிக்கு 110 - 160 மைல் வேகத்தில் அப்பிரதேசத்தில் நகரும் என்றும் பெருமழையும் வெள்ளமும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அதிகாரிகள் கூறினார்கள்.

இந்தப் பருவத்தில் வீசுகின்ற12ஆவது சூறாவளியாகும் வில்மா. சூறாவளிகள் பற்றிய பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த எண்ணிக்கை 1969ஆம் ஆண்டு மட்டுமே இதற்கு முன் ஒரு தடவை பதிவாகியுள்ளது.

கியுபாவின் மேற்குப் பகுதி யுகட்டன் வளைகுடா ஆகிய பகுதிகளைத் தாக்கிய பின் மெக்ஸிக்கோ குடா, புளோரிடா பிரதேசத்தை வாரக் கடைசியில் சென்றடையும் என்று கேமன் தீவுகளிலுள்ள காலநிலைக் கண்காணிப்பு மையம் அறிவித்துள்ளது.

கியுபாவில் ஹெயிட்டிப் பகுதியில் ஏற்கனவே பெருமழை தொடர்வதால் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் என்ற பயத்தில் தென் பகுதிகளை நோக்கி மக்கள் இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

புயல் பாதித்துள்ள மத்திய அமெரிக்காவில... பல நாடுகள் எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. ஹொன்டுராஸில் மக்கள் இடம்பெயர்வுக்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனர். அயல் நாடுகளான நிக்கரகுவா மற்றும் எல்சல்வடோர் நாடுகளின் புயல் நகரும் திசைகள் பற்றி உன்னிப்பான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வில்மாவின் பாதை அமெரிக்க குடாக் கரையிலிருந்து வேறு பக்கமாக திரும்பவும் கூடும். ஆனால், அது மேலும் வலுப்பெற்று 4ஆம் நிலைப் புயலாக மாறிக் கரிபியனிலிருந்து குடாவுக்குள் நுழையலாம் என்று மியாமியிலுள்ள அமெரிக்க சூறாவளி ஆய்வுமையம் அறிவித்துள்ளது. கடுமையாகப் பாதிக்கப்படலாம் என்று கருதப்படும் புளோறிடா கீ தீவுகளில் மக்களை அப்புறப்படுத்துவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவரு..ின்றன.

கத்தரினா மற்றும் றீட்டா சூறாவளிகளால் கடும் பாதிப்புக்குள்ளான நியூ..லியன்ஸ் நகர மேயர் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்- புயல் நகரை நோக்கி வீசும் பட்சத்தில் மீண்டும் ஒரு இடம்பெயர்வுக்கு ஆயத்தமாய் இருக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

கத்தரினா, றீட்டா ஆகிய சூறாவளிகளால் ஏற்கனவே பாதிப்புக்குள்ளன பிரதேசங்களே பெரும்பாலும் வில்மாவாலும் பாதிக்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதம் வீசிய கத்தரினா சூறாவளியால் அமெரிக்காவில் சுமார் 1, 200 மக்கள் கொல்லப்பட்டார்கள். இம் மாதம் ஆரம்பத்தில் வீசிய ஸ்ரான் சூறாவளியால் மெக்ஸிக்கோ மற்றும் மத்திய அமெரிக்காவில் மேலும் அநேகர் கொல்லப்பட்டனர். (ப)

## இந்தியா-அமெரிக்கா ஒப்பந்தம்

வாஷிங்ரன்,ஒக்.20

அறிவியல், தொழில்நுட்பம் குறித்த ஒப்பந்தத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் திங்கட்கிழமை கையெழுத்திட்டன.

சுகாதாரம், விண்வெளி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இருநாடுகளிடை.. ..ஒத்துழைப்பை மேற்கொள்ளும் வகையில் இந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கை..யழுத்திட்டன.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசா ரைஸ் மற்றும் இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் கபில் சிபல் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர். (ஐ)

## ஜம்மு காஷ்மீர் கல்வி அமைச்சர் தற்கொலையாளிகளால் கொலை!

ஸ்ரீநகர்,ஒக்.20

ஜம்மு காஷ்மீர் மாநில கல்வித்துறை இணையமைச்சர் குலாம் நபிலோன் (62) தற்கொலைப்படைத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஸ்ரீநகரில் பாதுகாப்பு மிகுந்த துளசிபாக் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பொலீஸாரும் தீவரவாதி மற்றும் அமைச்சரின் உறவினர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

சம்பவம் நடந்த பகுதியில்தான் ஜம்மு காஷ்மீர் மாநில அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் உயரதிகாரிகள் பலரின் வீடுகள் உள்ளன. முன்னதாக அங்குள்ள மார்க்சிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. முகமது யூசுப் தாரிகாமியின் இல்லத்தின் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரு தீவரவாதிகள் தாக்குதல் நடத்தினர். கையெறி குண்டுகளை வீசிக்கொண்டே துப்பாக்கியால் சுட்டனர்.

அப்போது தாரிகாமி தனது குடும்பத்தினருடன் வீட்டில்தான் இருந்தார். அவரது பாதுகாவலர்கள் தீவிரவாதிகளுடன் எதிர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்தச் சண்டையில் 2 பொலீஸாரும் ஒரு தீவிரவாதியும் கொல்லப்பட்டனர். சாதாரண குடிமகன் ஒருவர் காயமடைந்தார். உடனே மற்றொரு பயங்கரவாதி சுவரேறிக் குதித்து அருகிலுள்ள அமைச்சர் குலாம் நபிலோன் வீட்டுக்குள் புகுந்தார். அங்கும் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டார்.

அதில் லோன் மார்பில் குண்டு பாய்ந்து படுகாயமடைந்தார். அவரது உறவினர்கள் குலாம் முகைதீன் கான், குலாம் நபி நஜர் ஆகியோரும் காயமடைந்தனர். மூவரும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், அமைச்சர் வழியிலேயே இறந்து விட்டதாக அவரைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர்கள் தெரிவித்தனர். (ஐ)

## சுயஸ் வளைகுடாவில் கப்பல்கள் மோதல் ஒருவர் பலி; 1000இற்கும் மேற்பட்டோர் மீட்பு!

கெய்ரோ,ஒக்.20

இஸ்லாமிய யாத்திரிகர்களை ஏற்றிக் கொண்டு வந்த எகிப்தைச் சேர்ந்த கப்பலும் சைப்பிரஸ் நாட்டைச் சேர்ந்த வர்த்தகக் கப்பலும் சுயஸ் வளைகுடாவில் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் கப்பல் பயணி ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் 20 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த 'எல்-சலாம்' கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான பயணிகள் கப்பல் ஆயிரத்து 500 முஸ்லிம் யாத்திரிகர்களை ஏற்றிக் கொண்டு சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டா துறைமுகத்தில் இருந்து சுயஸ் வளைகுடா பகுதியில் வந்துகொண்டிருந்தது. அப்போது சைப்பிரஸ் வர்த்தகக் கப்பலும் சுயஸ் வளைகுடாப் பகுதியில் வந்துகொண்டிருந்தது. இரண்டு கப்பல்களும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. இந்த விபத்தில் எகிப்து நாட்டைச் சேர்ந்த எல்-சலாம் நிறுவனத்தின் பயணிகள் கப்பல் பலத்த சேதம் அடைந்தது. இதிலிருந்த பயணிகளில் ஒருவர் பலியானார். மேலும் சிலர் பலியாகி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இவற்றில் 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

சைப்பிரஸ் வர்த்தகக் கப்பலில் எத்தனை பேர் இருந்தனர். அந்தக் கப்பலின் மாலு..மிகள் மற்றும் சிப்பந்திகள் கதி என்ன? என்ற விவரங்கள் தெரியவில்லை. இரண்டு கப்பல்களும் மோதிக்கொண்டதை. அப்பகுதியில் பயணிக்க இருந்த 20இற்கும் மேற்பட்ட மிதவைக் கப்பல்கள் பார்த்தன. மிதவைகளில் இருந்தவர்கள் விரைந்து சென்று பயணிகள் கப்பலில் இருந்தவர்களை காப்பாற்றினர்.

எகிப்து நாட்டின் 'எல்-சலாம்' பயணிகள் கப்பலின் 5ஆயிரத்து 857 தொன் எடை கொண்டது. இந்தக் கப்பலில் 2 ஆயிரத்து 221 அறைகள் உள்ளன. தற்போது இந்தக் கப்பல் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறது. (ஐ)

## நிவாரணப் பொருள்களுக்காக பல மைல் தூரம் நடக்கும் மக்கள்: தொலைதூரப் பகுதிகளுக்கு கழுதைகள் மூலம் செல்லும் உதவிகள்!

முசாபராபாத்,ஒக்.20

பாகிஸ்தானில் பூகம்பம் பாதித்த பகுதிகளிலுள்ள மக்களுக்காக ஏராளமான நிவாரண பொருள்கள் வந்துவிட்டன. வானிலை தெளிவாகவுள்ளதால் மீட்பு மற்றும் நிவாரண பொருள்கள் வழங்கும் பணி தீவிரமாக இருந்தது. இருப்பினும், பிரச்சினைகள் தீரவில்லை.

பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்ட நிவாரணப் பொருள்கள் பூகம்பம் பாதித்த பகுதிகளில் உள்ள முக்கியமான நகரங்களில் தான் குவிக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பதில் தான் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவால் சாலைகள் துண்டிக்கப்பட்டு விட்டதால் ஏராளமான கிராமங்களுக்கு மீட்புக் குழுவினர் செல்லவில்லை.

வடமேற்கு எல்லைப்பகுதியில் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல மணி நேரம் மலையேறி நகரத்தை வந்தடைகின்றனர். போதிய நிவாரணப் பொருள்களுடன் மீண்டும் கடினமான பாதையில் தங்கள் கிராமத்துக்குச் செல்கின்றனர். முசாபராபாத் நகரிலுள்ள நிவாரணப் பொருள்களைப் பெற சில கிராம மக்கள் 35 கி.மீ., தூரம் நடந்தே வந்துள்ளனர்.

முசாபராபாத் நகர் அருகே உள்ளது நீலம் பள்ளத்தாக்கு. இங்குள்ள கிராம மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் கிடைக்கவில்லை. ஹெலிகொப்டர்கள் மூலம் சிறிது பொருள்கள் மட்டுமே போடப்பட்டன. எனவே நூற்று.. கணக்கானோர் ஏழு மணி நேரம் நடந்.. முசாபராபாத் நகரை அடைந்துள்ளனர். (ஐ)

## காணாமல் போனோரின் பாதுகாவலர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.20

வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்த பெற்றோர், உறவினர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். செயகத்தில் ஒன்று கூடும்படி சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

(த-204)

## மட்டக்களப்பு வாக்காளர் சோதனை செய்யப்படார்!

மட்டக்களப்பு,ஒக்.20

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வரும் வாக்காளர்களை சோதனை செய்வதில்லை என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்றுக்காலை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணானந்தலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி, கிரான், வாகரை ,வவுணதீவு வெல்லாவெளி, பட்டினப்பளை ஆகிய 6 இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச செயலர் பிரிவுகளிலும் 80 ஆயிரத்து 443 வாக்காளர்கள் உள்ளனர்.

இவர்களுக்காக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 88 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் வாக்களிப்பு நிலையங்களுக்கு வரும் கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர்கள் எதுவித பொருள்களையும் எடுத்துவரக்கூடாதென மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாவட்ட அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கிழக்கு மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் கே.தர்மரட்ண, லெப்ரினன்ட் கேணல் ஆர்.கே ராஜபத்திரன, இராணுவ சிவில் இணைப்பதிகாரி மேஜர் பேட்டி பெரேர, விசேட அதிரடிப் படையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.வி.எடமா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(8)

## சைக்கிளில் பக்கம்பக்கமாகச் சென்ற மாணவர்கள் சிக்கினர்

யாழ். நகர்ப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளில் மாணவர்கள் எட்டுப்பேர் சைக்கிள்களில் பக்கம்பக்கமாகச் சென்றபோது கைது செய்யப்பட்டனர்.

யாழ். நகரப் போக்குவரத்துப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட இவர்கள் யாழ். நீதிவான் ஆ... விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணையை மேற்கொண்ட நீதிவான் 8 மாணவர்களையும் தலா ஆயிரம் ரூபா அரச செலவாகச் செலுத்தும்படியும் 'இனிமேல் சைக்கிளில் பக்கம்பக்கமாகச் செல்ல மாட்டோம்' என்பதை ஆயிரம் தடவைகள் எழுதி ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ-202)


### புலமைப் பரீட்சையின் புள்ளிகளால் பூரிப்பு



செல்வன்
விமலபாலச்சந்திரன் தனுஷன்



செல்வி
பிரதீபா வேல்ராஜா

புள்ளிகளால் எம்மைப் பூரிக்கவைத்த வண்ணப் பிள்ளைகளே! நீவிர் வழமுடன் வாழி! வாழி!

அதிபர், ஆசிரியர், பெற்றோர்.

யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை. (41671)(26-34-15)



### திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு: ரட்ணம், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவியும் எமது நண்பன் சிறீதரன் -யோகரஞ்சினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியுமாகிய -

செல்வி பிரியங்கா

அவர்கள் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவர் கல்வியில் மேலும் சிறப்புற்று வளர அவரை எல்லாம் வல்ல சித்தன்கேணி விநாயகரை வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர் நண்பர்கள்.

பண்டத்தரிப்பு வீதி, சித்தன்கேணி. (41674) (18-21-15-34)


### நீதிமன்ற அறிவித்தல்

................................பருத்தித்துறை..................................................மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 529(2)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்து தொடர்பில் விருபபாவணத்தை எண்பிப்பதற்கான / மரணசாதன அதிகாரப் பத்திரத்துக்கான / மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகிறது. ஒரு விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது இதற்கான V ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு மரணசாதன அதிகாரப் பத்திரத்தின் அல்லது விருப்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்பிற்கென மரபுரிமையாண்மைச் சான்றிதளொன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும், 2005 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13ஆம் தேதிக்கு முன்னர் (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.


அட்டவணை

| நிரை I | நிரை II | நிரை III | நிரை IV | நிரை V | நிரை VI |
|---|---|---|---|---|---|
| மாவட்ட நீதி மன்றப் பதிவு இல | இறந்தவரின் பெயர் | இறந்தவர் விரும்பாவணம் விட்டுச் சென்றாரா? | விண்ணப்பத்தாரரின் பெயரும் முகவரியும் | [redacted] | சம்மதமளிக்கும் மரபுரிமையாளர்கள் |
| 1276 T | சுந்தரமூர்த்தி வெற்றி வேலாயுதம்பிள்ளை | இல்லை | வெற்றிவேலாயுதம்பிள்ளை கைம்பெண் தனலட்சுமி புலோலி தெற்கு,புலோலி | — | — |

S.சந்திரலிங்கம்
பதிவாளர்,மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

திகதி:08/08/2005 [redacted]

### 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 17-10-1946

ஆண்டவன் அடியில் 22-09-2005

ஆயிரம் உறவுகள் வந்திட்டாலும்
அம்மா உனக்கு நிகராகுமா
சாவினில் எம்மை நீ பிரிந்துவிட்டாய்
ஆயினும் நினைவினில் வாழுகின்றாய்
ஆறாத மனமே இனி எங்களிடம்
ஆண்டவனின் இணையடி நீ உறையுமிடம்
பிரார்த்திப்போம் உன் ஆத்மசாந்திக்காய்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

22-09-2005 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் தொலைபேசி ஊடாக ஆறுதல்கூறியும் மற்றும் சகலவழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (20-10-2005) வியாழக்கிழமை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் 22-10-2005 சனிக்கிழமை நடைபெறும் சபீட்டீகரண ஆத்மசாந்திக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ.பாலன் குடும்பத்தினர்.

சாவகச்சேரி வடக்கு,
கண்டி வீதி, மடத்தடி. (41669)(50-19-16)

திருமதி
செல்லத்தம்பி பரமேஸ்வரி

# யாழ். நகரில் தயாரிக்கப்பட்ட 'ஐஸ்கிறீம்' இல் மலத்தொற்று!

## கொழும்பு ஆய்வில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.நகரப் பகுதியில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றில் தயாரிக்கப்பட்ட 'ஐஸ் கிறீமில்' மலத்தொற்று (E-coli) ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். நகரில் இயங்கும் நான்கு குளிர்பான நிலையங்களில் இருந்து பெறப்பட்ட 'ஐஸ்கிறீம்' மாதிரிகள் ஆய்வுக்காகக் கொழும்பு உணவுப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கொழும்பில் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த மலத்தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட குளிர்பான நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் - மேலும் பல குளிர்பான நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்றும் யாழ். சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (9-ரி)

## சிப்பாயால் மீட்கப்பட்ட பணம் உரியவரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

55ஆவது படையணியின் கட்டளையின் கீழ் இயங்கும் முகமாலைச் சோதனைச் சாவடியில் தவறவிடப்பட்டிருந்த பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பையை 5 ஆவது விஜயபாகு பிரிவைச் சேர்ந்த கோப்ரல் சஜித்குமார என்ற சிப்பாய் உரியவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்தகவல் பலாலி இராணுவ முகாம் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி சோதனைச் சாவடியிலுள்ள வாகனங்களைப் பதிவுசெய்யுமிடத்திலிருந்து பயணப் பொதி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதனைப் பரிசோதித்தபோது அதனுள் 10 ஆயிரம் ரூபா பணமும் முக்கிய ஆவணங்கள் பலவும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர், ஆவணங்களின் உரிமையாளர் இனங்காணப்பட்டு அவரிடம் சோதனை நிலையத்தில் பணிபுரியும் பொலீஸ் சார்ஜன் உபுல் விக்கிரமசிங்கவின் உதவியுடன் பணமும் ஆவணங்களும் கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (9-204)

## உலக உணவு வேலைத்திட்டங்களில் பணிபுரிந்தோருக்கு உலர் உணவு

### உள்ளூராட்சி சபைகள் ஊடாக

யாழ்ப்பாணம்,ஒக்.20

2005 - உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்களை நிறைவேற்றிய யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு உலர் உணவு வழங்கப்படவுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் உதவித் திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீபன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக வேலை நிறைவேற்றிய வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு ஆயிரத்து 228 மனித நாள்களுக்குரிய உணவுகளும் - வல்வெட்டித்துறை நகரசபைக்கு 845 மனித நாள்களுக்கான உலர் உணவுகளும் விரைவில் வழங்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் ஊடாக கிராமிய மட்டத்தில் செய்துகொண்ட சமூகமட்ட நிறுவனங்களின் வேலையாள்களுக்கு இந்த உணவு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

மேற்படி உலக உணவுத் திட்டத்தின் கீழ் அரிசி, மா, பருப்பு, சீனி, மீன் (ரின்னில் அடைக்கப்பட்டவை) என்பன வழங்கப்படவுள்ளன. (9-185)




## கைத்தொழில் அமைச்சு உதவியில் அல்லாரையில் நாற்றுப்பண்ணை

வரணி,ஒக்.20

கிராமிய கைத்தொழில்துறை அமைச்சின் உதவியுடன் கடந்த வருடம் அல்லாரையில் உற்பத்திக் கிராம நாற்றுப்பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பண்ணையின் முன்னேற்றத்திற்கு மேற்குறிப்பிட்ட அமைச்சு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. நீர்ப்பாசனச் செயற்பாட்டை மேற்கொள்வதில் எழுந்த சிக்கல்களைச் சீரான நீர் முகாமைத்துவ அடிப்படையில் தீர்க்க இவ்வுதவி பெரிதும் பயன்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதனப் பசளையை மட்டும் பயன்படுத்திச் செயற்பட்டவரும் இப்பண்ணையில் வல்லாரை, பொன்னாங்காணி, கங்குன், கற்பூரவள்ளி, வெற்றிலைக்கையான் போன்ற மூலிகை இலைவகைகளை ஆயுள்வேதம், சித்த மருத்துவம் ஆகிய துறை வைத்தியர்கள் பெற்றுச்செல்வதாகவும்-

கைதடி சித்த மருத்துவபீடத்தினரும் இவற்றைக் கொள்வனவுசெய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் - கூறப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இங்கு உற்பத்தியாகும் வல்லாரை போன்ற கீரை வகைகளைச் சத்துணவு வழங்கும் திட்டத்திற்குக் கொள்வனவு செய்வதாகவும் கூறப்பட்டது.

மேலும், இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு பயிர்செய்யப்பட்டுள்ள - நாள்தோறும், வருடம் முழுவதும் விளைச்சல் தரும் - நல்லின முருங்கை மர நாற்றுக்களும் இங்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்னை, மா, செம்பகவிரியன் ரக பலா ஆகிய மரக்கன்றுகளும் இங்கு உற்பத்தியாகின்றன. இப்பண்ணையின் அபிவிருத்தி கருதி யாழ்.அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 7 லட்சத்து 75ஆயிரம் ரூபா உதவியாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், தூவல் நீர்ப்பாசனத் திட்டத்துக்கும் கமநல சேவை நிலையத்தில் இருந்து மானியமாக ரூபா 15 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (9-170)

## மத்திய மருந்தகம் அமைக்க வழங்கிய காணி விரைவில் மீளளிக்கப்படும்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

மானிப்பாய் மத்திய மருந்தகம் அமைப்பதற்காக மானிப்பாய் சுகாதார சமூக, சுற்றாடல் சபையால் வழங்கப்பட்ட காணி விரைவில் அவர்களிடம் மீளளிக்கப்படும். அக்காணியை ஒப்படைப்பதற்கான அங்கீகாரம் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. அது கிடைத்தவுடன் காணி ஒப்படைக்கப்படும்.

- இவ்வாறு விளக்கமளித்துள்ளார் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன். ''மகப்பேற்றுமனையைக் கட்டிமுடியுங்கள். அல்லது இலவசக் காணியை மீளத் தாருங்கள்'' என்னும் தலைப்பில் கடந்த 14 ஆம் திகதி 'உதயனில்' வெளியாகிய செய்தி தொடர்பாகவே இந்த விளக்கத்தை அளித்திருக்கின்றார் சுகாதாரப் பணிப்பாளர்.

மானிப்பாய் சமூக, சுற்றாடல் விவகார சபைத் தலைவர் சட்டத்தரணி இ.வசந்தசேனன் சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் தொடர்பாக இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பணிப்பாளரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மானிப்பாய் மத்திய மருந்தகம் அமைப்பது தொடர்பாக மானிப்பாய் மத்திய மருந்தக மகற்பேற்றுமனை அபிவிருத்திச் சபையினர் நவாலி, ஆனைக்கோட்டை வீதியிலும், மானிப்பாய் சுகாதார, சமூக, சுற்றாடல் விவகார சபையினர் டச்சு வீதி, மானிப்பாயிலும் அமைக்குமாறு கோரி சுகாதாரத் திணைக்களத்திற்கு இரண்டு காணிகளை வழங்கியிருந்தனர். மத்திய மருந்தகத்தை அமைப்பதற்கான காணியைத் தெரிவுசெய்து வழங்குமாறு பிரதேச செயலாளரைக் கோரியபோது நவாலி, ஆனைக்கோட்டை வீதியில் வழங்கப்பட்ட காணியைப் பிரதேச செயலாளர் சிபார்சு செய்தமையால் அவ்விடத்தில் கட்டடம் அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் கட்டடப் பணிகள் 2006 இல் ஆரம்பிக்கப்படும். மானிப்பாய் சுகாதார சமூக, சுற்றாடல், விவகார சபையின் தலைவர் தமது சபையால் வழங்கப்பட்ட காணியை மீள ஒப்படைக்குமாறு கோரியதற்கிணங்க அக்காணியை அவரிடம் ஒப்படைப்பதற்கான அங்கீகாரத்தினைச் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளோம். அங்கீகாரம் கிடைத்ததும் காணியை ஒப்படைக்கத் தயாராகவுள்ளோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-51)

## 55 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நேர்முகப் பரீட்சை

அச்சுவேலி,ஒக்.20

வடக்கு - கிழக்கில் ஆங்கிலம் கற்பிக்கும் பகுதிநேர ஆசிரியர்களில் மேலும் 55 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளன.

பகுதிநேர ஆசிரியர்களாகக் கடமையாற்றி நியமனம் பெறத் தவறியவர்களில் 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 180 நாள்கள் தொடர்ச்சியாகக் கடமைபுரிந்த 55 பேருக்கே நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கக் கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

55 பேரின் பெயர்ப்பட்டியல் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

முன்னர் நியமனம் வழங்கப்பட்ட பட்டியலில் தவறவிடப்பட்டவர்களின் மேன்முறையீட்டின் அடிப்படையில் இந்த 55 பேரின் பெயர்ப்பட்டியலை கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (ஐ-11)

## வாசகர் திருமுகம்

### ஏழு வருட ஓய்வூதிய நிலுவை எப்போது?

31-12-1996இற்குப் பின் ஓய்வுபெற்ற பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் ஓய்வூதியம் அதிகரிப்புடன் வழங்கப்பட்டு வந்தது - வருகிறது. அத்திகதிக்கு முன் ஓய்வுபெற்ற அதே தராதரம், அதே சேவையுள்ள பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அவர்கள் மிகவும் அதிருப்தி அடைந்தார்கள். ஏன் இந்த முரண்பாடு என்று வினா எழுப்பினார்கள். பலரும் இதனைக் கண்டித்தார்கள். அதே ஓய்வூதியம் தமக்கும் வழங்கவேண்டும் என்று முன்னைய ஓய்வூதியர் வற்புறுத்தினர்; வேண்டி நின்றனர். ஆனால், ஏழு வருடங்களைத் தவிர்த்து 01-01-2004இல் இருந்துதான் அந்த அதிகரிப்பு வழங்கப்படுகிறது. ஆனால், ஜனவரி 1997 தொடக்கம் டிசெம்பர் 2003 வரையிலான ஏழு வருட அதாவது 7x12=84 மாதங்களுக்கான ஓய்வூதிய நிலுவையை ஏன் வழங்கக்கூடாது? எப்போது வழங்கப்படும்? என்று பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் வேண்டி நிற்கிறார்கள். ஏன் இந்தப் பாரபட்சமும் முரண்பாடும்? ஓய்வூதியர் சங்கங்கள் ஏன் இதுபற்றி நடவடிக்கை எடுக்கக்கூடாது? நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனைக் கருத்திற்கொண்டு ஆவனசெய்யலாம்.

**வல்வெட்டித்துறை.** **- பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்.**

### வீதியா? விதியா?

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் விஸ்தரிக்கப்படவுள்ளன எனும் செய்தி நீண்டகாலமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. இருக்கும் பாதைகளை மக்கள் முழுமையாகப் பயன்படுத்தினால்கூட ஓரளவு போக்குவரத்து நெரிசலைக் குறைக்கலாம்; அதற்கு வழியில்லாதவாறு பல சம்பவங்கள் நடைபெறுகின்றன.

வீதியோரங்களில் உள்ள கடைகள், விளம்பரப்பலகைகள் பாதி வீதியை ஆக்கிரமித்துள்ளன. யாழ். வைத்தியசாலையின் பின் வீதி (மின்சாரநிலைய வீதி) முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். இங்கு குறிப்பாக, பஸ் நிலையத்திற்குப் பின்னால் மினி பஸ்கள் ''உக்கிரதாண்டவம்'' ஆடுகின்றன. ஸ்ரான்லி வீதியிலிருந்து மின்சார நிலைய வீதிக்கு வரும் துணை வீதியில் சிறிய வாகனம்கூட செல்லமுடியாத நிலை. இதனை ஒழுங்குபடுத்த யாழ். முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள புதிய இடம் உடன் பயன்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். தீபாவளி நெரிசலை சம்பந்தப்பட்டவர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். மலசலகூட வசதி செய்யப்படாததனால் இந்த இடப் பயன்பாடு தாமதமாகிறது என ஒரு செய்தி. யாழ். பஸ் தரிப்பிடத்தில் இவ்வசதி எவ்வாறு உள்ளது எனச் சற்றுச் சிந்திக்கவும். மலசலகூடத்தைக் காரணமாக்கிக் காலத்தைத் தாமதம் செய்யக்கூடாது.

நிர்வாகம் - நிர்வாகிகள் இறுக்கமான முடிவுகளை மேற்கொள்ளாவிடின் இங்கு எந்த ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தமுடியாது. மினி பஸ்கள், கொழும்பு செல்லும் பஸ்கள் உடனடியாக முற்றவெளிக்குக் கொண்டுசெல்லப்படவேண்டியது அவசியமும் அவசரமுமான விடயமாகும்.

**யாழ்ப்பாணம்.** 'சமூக திலகம்' **இரா.செல்வவடிவேல்.**

# உளம் கனிந்த வாழ்த்துக்கள்



*இறைபணியில் தன்னை அர்ப்பணித்து யேசு சபை அகதிப் பணியில் தன்னை இணைத்து இலைமறை காயாக சொல்லில் அடங்கா சேவை பல புரிந்து வாழ்வியல் பயிற்சியால் எமக்கு வாழ வழிகாட்டிய எம் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய*

அருட்சகோதரி றெமோஷிலி பர்ணாந்து

அவர்களை இறையாசி பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்ந்து, செல்லும் இடம் எங்கும் அவர் பணி மென்மேலும் சிறக்க மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**J.R.S. பழைய மாணவர்கள், நண்பர்கள்.**

(41664)(46-19-15-42)

# செயலகத்தில் விவசாயக் குழுக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.20

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடை றவுள்ள இக்கூட்டத்தில் பயிர் உற்பத்தி, பெரும்போக பயிர்ச் செய்கை, மரநடுகை, உணவு விவசாய நடவடிக்கைகள், பனை தென்னை வள அபிவிருத்தி என்பன குறித்து கலந்துரையாடப்படும்.

இதில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்வர். (3-204-202)

# யாழ். மாநகர சபைப் பகுதியில் 12 வீதிகளைப் புனரமைக்க ஏற்பாடு

யு.என்.ஹபிற்றாட் நிறுவனம் யாழ். மாநாகரசபை எல்லைக்குட்பட்ட கிராமங்கள் சிலவற்றைத் தெரிவுசெய்து, கிராம மக்களின் உதவியுடன் அக்கிராமத்திலுள்ள வீதிகளைச் செப்பனிடவுள்ளது.

இதன் முதற்கட்டமாக திருநகர், பாஷையூர், குருநகர், நாவாந்துறை வடக்கு, கந்தர்மடம், சங்கிலியன் தோப்பு, நாயன்மார்கட்டு, அரியாலை மத்தி, அரியாலை வடக்கு, கண்ணாபுரம், வில்லூன்றி மீனாட்சி புரம் ஆகிய பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீதியும் இருபது லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் ஆரம்ப கட்ட வேலைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. (3)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **முருகேசு நாகம்மா**

(12ஆம் வட்டாரம், புங்குடுதீவு)
திதி: 20-10-2005

பிறப்பு 27-12-1927
இறப்பு 20-10-2002

*ஆண்டுகள் மூன்று கடந்ததம்மா நீங்கள் எம்மை பிரிந்து*
*ஆறாத்துயர் நித்தம் எம்மை வாட்டுதம்மா!*
*பண்புடனே உருவாக்கி பாசமுடன் வாழவைத்து*
*நேசமுடன் வளர்த்தெடுத்தாய்*
*நீயில்லா வாழ்வுதனை நினைக்க மனம் வேதனையடைகிறது*
*நாம் இவ்வுலகில் வாழும்வரை*
*எந்நாளும் உன்னை மறவேனம்மா!*
*உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை*
*எந்நாளும் பிரார்த்திக்கின்றோம்*

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'அம்மன் அருள்',
கலைமணி லேன்,
கட்டப்பிராய்.
T.P.: 021 4591875

தகவல்
மு.செல்லத்துரை (மகன்),
நா.தேவி (மகள்).

(41668)(46-19-15-42)

# மீள்நியமனம்

நல்லூர்,ஒக்.20

புங்குடுதீவு மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய அதிகாரியாக மீள்நியமனம் வழங்கப்பட்ட வைத்திய கலாநிதி எட்வேட் மரியதாஸ் கடந்த 15ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கென ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 10 ஆயிரம் மாதம் ஒன்றிற்கு வழங்கவென வெளிநாடுகளில் வதியும் புங்குடுதீவைச் சேர்ந்த மக்கள் முன் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-111)

# இசைக்கருவியை மீளப்பெறக் கோரிக்கை

சுனாமி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற விழாவின் போது கலைநிகழ்ச்சிகளில் பாவிக்கப்பட்ட முக்கியமான இசைக்கருவி ஒன்று அதனைப் பாவித்த பாடசாலைக் குழு ஒன்றினால் இதுவரை எடுத்துச் செல்லப்படாது உள்ளது.

குறிப்பிட்ட பாடசாலையினர் வலிகாமம் கல்வி வலயக் காரியாலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி எஸ்.கந்தையாவிடம் இசைக் கருவியை அடையாளம் காட்டி பெற்றுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9-152)


# MBBS / MD
## BECOME A DOCTOR

Medical Degree (Doctor of Medicine MD) offered by



**CRIMEA MEDICAL INSTITUTE**
**(CRIMEA STATE MEDICAL UNIVERSITY)**

East **EUROPE** (Ukraine)

**Recognized by the SRI LANKAN MEDICAL COUNCIL**

**M.B.B.S Degree Program (6 years)**
Eligibility : G.C.E A/L passes in Biology Physics and Chemistry

**Premedical Program + MBBS (7 years)**
Eligibility : G.C.E O/L passes in All subjects including English, Maths and Science

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால், UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அயல்நாடுகளாகிய Poland Romania, Austria, Italy, France, Spain, Germany, U.K, ஆகியநாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

## யாழ்ப்பாணத்தில்.......

22ஆம் திகதி (சனிக்கிழமை) & 23ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.
நேரம் : 22ம் திகதி சனிக்கிழமை~மாலை 3.30 pm - 6.30 pm
23ம் திகதி ஞாயிற்றுகிழமை~காலை 9.30 am ~ 1.30 pm

**Authorized Agents for Asian Region:**
M/s. MAJU INDRA SDN BHD, Kuala Lumpur Malaysia.

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com **Tel: 0777-767818**

ஐரோப்பிய நாடொன்றிற்கு சட்டபூர்வமாக செல்வதற்கு அரியவாய்ப்பு


# மிருக வைத்தியசாலை புனரமைக்கப்படுகிறது

வரணி,ஒக்.20

சாவகச்சேரி மிருக வைத்திய அலுவலகம் புனரமைக்கப்பட உள்ளது. உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும் நியாப் II திட்டத்தின் ஊடாக இது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மேற்படி அலுவலகம் கடந்த யுத்த கால கட்டத்தில் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது. தற்சமயம் இவ்வலுவலகம் தனியார் கட்டடமொன்றில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (9-170)

# காரை சுந்தரம்பிள்ளையின் நினைவு அஞ்சலி நிகழ்வு

அண்மையில் காலமான கவிஞர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளையின் நினைவு அஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அஞ்சலி உரைகளை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் கலாநிதி சு.ஜெபநேசன் அடிகளார், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், கவிஞர் சோ.பத்மநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் உட்பட பலர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வின் நிறைவாக கவிதாஞ்சலி இடம் பெறும். கவிதாஞ்சலி நிகழ்வில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி, கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொள்வர். (3-12)


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்



## Mobile Phone Repairing Course



*Course Condense:-*
- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phone ல் காணப்படும் I.C க்கள்)
- Spares பழுதினால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- I.C கள் பழுதடைந்தால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- பொதுவாக Phoneல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென் கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

**Hard Ware பயிற்சி**
- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Chareg ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

**Software பயிற்சிகள்**
- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன் பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
*Batch I :- 28/10/2005 - 08.30-12.30*
*Batch II:-29/10/2005 - 01.30-05.30*

காலம் :- 2 மாதம்

ஒரு பிரிவில் 20பேர் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# புலிகளின் பகுதி மக்கள் தேர்தலில் சுதந்திரமாக வந்து வாக்களிக்கலாம்

## இராணுவத்தினர் எழுத்து மூல உறுதிமொழி

மட்டக்களப்பு, ஒக்.20

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரமாக வந்து, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கலாம்.

இது தொடர்பான உத்தரவாதத்தை படையினர் நேற்றுமுன்தினம் வழங்கினர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 4 இராணுவ படைப் பிரிவின் கட்டளை அதிகாரிகளுடன் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான எஸ்.புண்ணியமூர்த்தி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். இக் கூட்டத்தின் முடிவில் இராணுவத்தின் உத்தரவாதம் எழுத்து மூலமாக அரச அதிபரிடம் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க 3 லட்சத்து 18 ஆயிரத்து 728 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இதற்கென 354 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வாக்காளர்களில் 25.4 வீத வாக்காளர்கள் (80 ஆயிரத்து 443 பேர்) விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்களுக்குரிய 89 வாக்களிப்பு நிலை யங்களும் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதி களில் 12 இடங்களில் கொத்தணி வாக்களிப்பு நில்லயங்களாக அமைக்கப்படவுள்ளன.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆராய நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட தேர் தல் தெரிவத்தாட்சி அலுவலர் எஸ்.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் பொலீஸ், இராணுவம், விசேட அதிரடிப்படை ஆகியவற்றின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து வாக்களிக்க வரும் மக்களைப்பொதிகள் இன்றி வருமாறும் படையினர் வேண்டுகோள் விடுத்தனர்.

வாக்காளர்கள் பயன்படுத்தும் வாகனங்களைக் கொத்தணி வாக்குச் சாவடிகளிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் நிறுத்துவது, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களான சின்னவத்தை மற்றும் கமுனபுர ஆகிய இடங்களுக்கு வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லவும் எடுத்து வரவும் விமானப் படையினரின் ஹெலி உதவியை நாடுவது,

வாக்களிப்பு நிலையத்தில் வழமையான பாதுகாப்புடன் மேலதிகமாக இராணுவ மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வது - என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளன. (க-3)

## கைதிகளை ஏற்றி வந்த பஸ் வயோதிபரை மோதியது

பதுளை, ஒக்.20

சிறைக் கைதிகளை ஏற்றிச்சென்ற பஸ், வயோதிபப் பாதசாரி ஒருவரை மோதியதில் அந்த வயோதிபர் அந்த இடத்திலேயே மரணமானார். இச்சம்பவம் பதுளை அம்பகா ஓயா என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

அம்பகா ஓயவைச் சேர்ந்த - 80 வயது நிரம்பிய ஆர்.எம்.ஹீன் பண்டா என்பவரே மரணமானவராவார்.

மகியங்கனையிலிருந்து கைதிகளை ஏற்றிக்கொண்டு பதுளை நீதிமன்றத்திற்குச் சென்ற பஸ்ஸே இவ்வாறு வழியில் விபத்தில் சிக்கியது.

இந்த விபத்துக் குறித்து, பதுளைப் பொலீஸ் போக்குவரத்துக் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறைச்சாலைக்குரிய பஸ் சாரதியை அவர்கள் கைதுசெய்து பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் பிரதீப். எம்.அபேரட்ன உத்தரவிட்டார். (க-3)

## உடுவே தம்மாலோக தேரிடமும் ஆதரவு கேட்கின்றார் பிரதமர்!

கொழும்பு, ஒக். 20

ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரிக்குமாறு ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரரை நேரில் சந்தித்து மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். உடுவே தம்மாலோக தேரர் தங்கியிருந்த ஆச்சிரமத்திற்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் நேரில் சென்ற மஹிந்த ராஜபக்ஷ இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தனது ஆதரவை யாருக்கு வழங்குவதென்பது குறித்துத் தான் ஆராய்ந்து வருகிறார் எனவும் அடுத்த வாரமளவில் தனது முடிவை அறிவிப்பார் எனவும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு உடுவே தம்மாலோக தேரர் பதிலளித்துள்ளார்.

தேர்தலில் யாரை ஆதரிப்பதென்பது குறித்து முடிவெடுப்பதற்காக உடுவே தம்மாலோக தேரர் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்து உரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் மஹிந்தவை ஆதரிப்பது என ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தீர்மானித்த போதும் தம்மாலோக தேரர் மட்டும் அந்த முடிவுக்கு இணங்காது தன்னிச்சையாக முடிவெடுக்கப் போகிறார் என்று கூறியுள்ளார். (க-3)

## புலிகளின் தாயகக் கோட்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கிறதா?

### பிக்குகள் முன்னணி எழுப்பும் கேள்வி இது

கொழும்பு, ஒக். 20

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கிறதா என்பது குறித்து அக்கட்சி விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தாம்பர அமிலதேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது தொடர்பாக தாம்பர அமில தேரர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தங்களை மீறி வருகின்றனர். லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டார். சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரிகள், உளவாளிகள் உள்ளிட்ட பலரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 15ஆம் திகதி இப்படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருந்த ஐ.தே.கட்சி இக்கொலைகளை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்று கூறவில்லை.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஐ.தே.க. கூறி வருகிறது. ஒஸ்லோ பிரகடனமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித் தாயகக் கோட்பாடு மற்றும் பிரிவினையை ஆதரிக்கிறது. அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறதா? - என்று அக்கடிதத்தில் அமிலதேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(க-3)

# சபாநாயகரை நாடாளுமன்றுக்குள் திட்டித் தீர்த்தார் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர்

## அதற்குக் கவலையும் கண்டனமும் வெளியிட்டார் அநுரா

கொழும்பு, ஒக்.20

நாடாளுமன்றத்துக்குள் நேற்றுமுன்தினம் சபாநாய கரைத் திட்டித் தீர்த்தார் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

தமது சகாவின் இந்தச் செயலுக்காகக் கவலையும் கண்டனமும் வெளியிட்டார் வெளிவிவகார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரான அநுரா பண்டாரநாயக்கா.

''நாடாளுமன்ற சபாபீடத்தில் எவர் சபாநாயகராக இருந்தாலும் அந்த ஆசனத்தைக் கௌரவப்படுத்தவேண்டியது சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையாகும். ஆனால், இன்று ஆளும்கட்சி உறுப்பினர்களான எனது சகாக்கள் மிகவும் அநாகரிகமாக நடந்துகொண்டதை நான் வன்மையாகக் கண்டிப்பதோடு, அதற்காகக் கவலையும் அடைகிறேன்'' - இவ்வாறு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா விசனம் தெரிவித்தார்.

ஆளும்கட்சிக் கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சபாநாயகரை மிகமோசமான வார்த்தைகளால் அநாகரீகமான முறையில் திட்டித்தீர்த்தார். இதனால், நேற்று முன்தினம் சபையில் சுமார் 40 நிமிடங்கள் அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

சபாநாயகரின் உத்தரவுகளுக்கு அடிபணிய மறுத்து சபாநாயகர் மீது வசை பாடினார் ஆளும்தரப்பு பிரதம கொறடா. அவருடன் பிரதி அமைச்சரான புஷ்பகுமாரவும் இணைந்துகொண்டு பக்கப்பாட்டுப் பாடினார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியுமான தியாகராஜா மகேஸ்வரன் துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

துறைமுக அதிகாரசபை மற்றும் அதனோடு தொடர்புடைய நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் அல்லது குத்தகை முறையில் பயன்படுத்தப்படும் வாகனங்கள், அவற்றிற்கான செலவுகள், அந்த வாகனங்களைப் பயன்படுத்துபவர்களின் விவரங்கள் என்பனவற்றை சபையில் சமர்ப்பிக்கவேண்டும் என்றே மகேஸ்வரன் எம்.பி. தனது கேள்வியில் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் சார்பில் ஆளும்கட்சிக் கொறடாவான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பதில் அளிக்க முற்பட்டார்.

அமைச்சரால் வழங்கப்பட்ட பதிலை சபாபீடத்தில் சமர்ப்பிப்பதாகக் கூறிய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அதனைத் தொடர்ந்து ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தார். ரணில் விக்கிரமசிங்கவையும் தவறான வார்த்தைகளால் உவமானம் கூறி விமர்சித்தார் அவர்.

ஆனால், சபாநாயகர் அந்த உரைக்கு அனுமதிக்க முடியாது என்றும், அமைச்சர் அளிக்கும் பதில் ஒரு விவாதமாக மாற இடமளிக்க முடியாது என்றும் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சபாநாயகர் மீது பாய்ந்து விழுந்தார்.

சபாநாயகர் பக்கச் சார்பாகச் செயல்படுகிறார் எனவும், ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்ற முனைகின்றார் என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

இச்சமயம் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே பயன்படுத்தக்கூடாத மோசமான வார்த்தைகளையும் பிரயோகித்தார்.

தனது நாடாளுமன்ற அனுபவத்தில் ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஒருவர் இப்படி பொறுப்பற்ற முறையிலும் அநாகரிகமாக நடந்துகொண்டமை இதுவே முதல் தடவை என்று அதிர்ச்சியோடு குறிப்பிட்டார் சபாநாயகர்.

எனினும் கூட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சபாநாயகரை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவு மோசமாகத் தொடர்ந்தும் பேசினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான மகேஸ்வரன், டாக்டர் ராஜித்த சேனாரத்ன, மஹிந்த சமரசிங்க ஆகியோரும் சபாநாயகருக்கு ஆதரவாகக் குரல்எழுப்பினர்.

இதனால், சபையில் ஒரே குழப்பம் நீடித்தது. இந்தச் சமயத்தில் பார்வையாளர் கலரியில் பெருமளவிலான பாடசாலை மாணவர்கள் காணப்பட்டனர்.

இதனைச் சுட்டிக்காட்டிய சபாநாயகர், சபை உறுப்பினர்களும் ஆளும் கட்சிக் கொறடாவும் சற்று கௌரவமாக நடந்துகொண்டால் நல்லது என்று கூறினார். ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் எவருமே அதனைச் செவிமடுத்தவர்களாகத் தெரியவில்லை.

இதனால், மகேஸ்வரன் எம்.பி.யினால் எழுப்பப்பட்ட கேள்வி தொடர்பான விடயங்கள் தவிர, ஏனைய அனைத்து வார்த்தைப் பிரயோகங்களையும் ச்பைப் பதிவேட்டில் இருந்து நீக்கும்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

முதலாவது கேள்வியிலேயே கேள்வி நேரங்கள் முற்றுப்பெற்றுவிட்டன. ஏனைய கேள்விகளுக்கு விடைபெறுவது எப்படி என்று கேள்வி எழுப்பிய எதிர்கட்சிக் கொறடா மஹிந்த சமரசிங்க சபையின் நிலையியல் சட்டங்களைச் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து ஏனைய கேள்விகள் அனைத்திற்குமான விடைகள் சபாபீடத்தில் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டன. அப்போதும்கூட மகேஸ்வரன் எம்.பி. சில இடைக்கேள்விகளை எழுப்பினார்.

இச்சமயம் அமைச்சர் அநுராபண்டாரநாயக்கா ''ஐயா என்னிடம் விடைதயாராக இருக்கின்றது. 150 பக்கவிடை. ஏற்கனவே கேள்வி நேரம் முடிந்துவிட்டது. தேவை என்றால் முதலில் சிங்களத்திலும் பின் ஆங்கிலத்திலும் இறுதியாக எனக்கு முடிந்த தமிழிலும் பதில் அளிக்கின்றேன்'' -என்றார் அமைச்சர் அநுரபண்டார நாயக்கா. அமைச்சரின் பதில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் விடைகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக அமைச்சர் அநுராபண்டாரநாயக்கா உல்லாசப்பிரயாணத் துறைகள் சபையை, உல்லாசப்பிரயாணத் துறை அபிவிருத்தி அதிகாரசபையாக மாற்றி அமைப்பதற்கான திருத்தச் சட்டவரைவு ஒன்றை சபையில் சமர்ப்பித்தார்.

தனது உரையை ஆரம்பிக்கும்முன் சபையில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கு அநுரா கவலை தெரிவித்துக்கொண்டார்.

''சபாநாயகரின் தீர்ப்புகள் தவறாக இருக்கலாம். அதனை எதிர்க்கவோ, ஆட்சேபிக்கவோ உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், சபாபீடத்தில் எவர் இருப்பினும் அவருக்குரிய கௌரவம் வழங்கப்படவேண்டும்.''

''இவ்விடயத்தில் எனது சகாக்கள் நடந்துகொண்டவிதும் பெரிதும்வேதனைக்குரியதாகிவிட்டது. எதிர்காலத்தில் இப்படி நடந்துகொள்ளக்கூடாது'' - என்றும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா கூறினார். (க-3)

அன்புள்ள தொழிலதிபர்களே,

நாட்டின் வியாபாரத் துறையை உலகதரத்திற்கு புதிய முறையில் முன்னேற்றுவதற்காக, முதலாவது தொழிலதிபராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன்.

சின்னம் கோப்பை

விக்டர் ஹெட்டிகொட
சித்தாலேப வைத்தியர்.

www.victor hettigoda.com
www.lankaenews.com
www.presidentialpoll2005.com

S.V.H.

# தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட பாதாள உலகக் கும்பல்கள் தயார்

## அரசியல்கட்சிகள் பின்னணியில் என்கிறது சிங்களப் பத்திரிகை

கொழும்பு,ஒக்.20

ஜனாதிபதித் தேர்தலின்போது வன்முறைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கென அடியாள்களை ஒரு சில கட்சி அமைப்பாளர்கள் அமர்த்தியுள்ளனர் என்று பொலீஸ் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசியல் கட்சிகளோடு கூட்டுச்சேர்ந்து வன்முறைகளில் ஈடுபட ஆயத்தமாகும் பாதாள உலகைச் சேர்ந்த குண்டர் குழுக்கள் பற்றிய சகல விவரங்களும் ஏற்கனவே பொலீஸாரால் சேகரிக்கப்பட்டுள்ளன. பாரபட்சம் இன்றி சகல பாதாள உலகக் குழுக்களையும் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களோ அல்லது கட்சி அமைப்பாளர்களோ தத்தமது கட்சிகளின் பிரசாரச் செயற்பாடுகளில் பாதாள உலகக் குழுக்களை ஈடுபடுத்தியிருப்பார்களேயாயின் உடனடியாக அச்செயற்பாடுகளைக் கைவிடுமாறும் பொலீஸ்மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பின் பல பிரதேசங்களைச் சேர்ந்த பாதாள உலகக் குழுக்கள் தவிர்ந்த மற்றொரு ஆயுதக் குழுவினரும் அரசியல் கட்சி ஒன்றுடன் கூட்டுச்சேர்ந்துள்ளது. அதிநவீன துப்பாக்கிகள் பெருமளவில் அவர்கள் வசம் உள்ளன என்றும் தேர்தல் வாக்களிப்பின் போது அடாவடித்தனங்களில் இறங்க இவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்றும்-பொலீஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படும் எந்தவொரு நபராயினும் பாரபட்சமின்றிக் கைது செய்யப்படுவாரெனவும் தேர்தல் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

(ஒ-206)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துகள்

20-10-2005




ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மசீலன் - சுதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான மதுசாந் - கபிசாந் இருவரும் தமது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (20-10-2005) வியாழக்கிழமை ஊரெழு கிழக்கிலுள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பூட்டி, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஊரெழு கிழக்கு ஞானவைரவர் அருள்பெற்று பல்கலைகளையும் கற்றுப் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: ஐ.மகேந்திரன்
(அம்மப்பா)
ஊரெழு கிழக்கு.

வாணி ரான்ஸ்போட்
தொ.பே.0777-732561.
(41576)(50-16)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

**யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்**
ஆசிரியர் தினத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து
ஜனாதிபதி விருதாகிய நல்லாசிரியர் விருது பெற்ற
**திருமதி கடம்பமலர் விமலராசா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
2005 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவச் செல்வங்களான

செல்வன் தி.யசிந்தன் (161) மாவட்ட நிலை (16)

| | |
|---|---|
| செல்வன் அ.குருநந்தன் (142) | செல்வி ல.எழிலரசி (134) |
| செல்வி நா.நதியா (134) | செல்வி பா.வைஷ்ணவ (129) |
| செல்வி கி.விபுனா (126) | செல்வன் இ.ருக்ஸ்மன் (125) |

அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் கல்வியில் பல சிறப்புக்கள் பெற்றுவாழ வாழ்த்துகின்றேன்.

**செல்வி பா. மார்க்கண்டு**
முன்னாள் அதிபர் (S.L.P.S. I)

(41662)(51-)

## திருமண அழைப்பு

ஓம் ஸ்ரீராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித் திங்கள் 5 ஆம் நாள் (22.10.2005) சனிக்கிழமை பகல் 12.14 மணிமுதல் பி.ப. 1.58 மணிவரையுள்ள மிருகசீரிட நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் மகர லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன
**வாசவன்**
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி
**சசிரேகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் கோயில் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி பஞ்சாட்சரம்
குடும்பத்தினர்.
பு,நாறி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி லெட்சுமணராஜா
குடும்பத்தினர்.
லெ.சற்குணராஜன்.
இல.54, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (41649)(51-11-17-16)

## யாழ். கல்விவலய அடைவுமட்டம்

அண்மையில் வெளியாகிய ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவுமட்டம் யாழ்.வலயத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, வழமைபோல் இம்முறையும் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடைவுமட்டம் யாழ்.வலயத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் யாழ் வலயத்துக்குட்பட்ட பிரிவுகளில் கடந்த ஆண்டினை விட இம்முறை சித்தியடைந்தோர் எண்ணிக்கை மூன்று சதவீதம் உயர்ந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-13)

## விசேட தீபாவளிச் சலுகை!

உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களானாலும் எந்த அளவினதானாலும் 5 வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| சுவிஸ்லாந்துக்கான | லண்டனுக்கான |
|---|---|
| 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/= | 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/= |

ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளுக்கான பொதிகளுக்கு விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

38, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

## 25ஆம் ஆண்டு திருமண நிறைவில் வெள்ளிவிழா




திரு. திருமதி
அந்தோனிப்பிள்ளை மேரிகொன்செப்ரா (தாளையடி)

இல்லறமெனும் நல்லறம் தனில்
இறையருளால் இனிதே இணைந்து
வெள்ளி விழாக் காணுமெம் பெற்றோரான
அந்தோனிப்பிள்ளை மேரிகொன்செப்ரா தம்பதிகளை
பல்லாண்டு காலம் பெரும் சிறப்புப் பெற்று
குன்றிலிட்ட தீபங்கள் போல் என்றும் மிளிர்ந்திட
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நிரந்தர முகவரி:
தாளையடி.

தற்காலிக முகவரி:
No-142, 1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். T.P:0779046683

அன்புப் பிள்ளைகள
A.பகீதரன், A.பவப்பிரியா,
A.பவமேனன்

# குளக்கட்டின் மீது போக்குவரத்து; இதனால் குளத்துக்குப் பாதிப்பு!

## விபத்துக்களும் ஏற்படும் அபாயம்



பரந்தன்,ஒக்.20

கிளிநொச்சிக் குளத்தின் குளக்கட்டு மீது பொதுமக்கள் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் போக்குவரத்துச் செய்கின்றனர். இதனால், இந்தக் குளக்கட்டுக்குப் பாதிப்பு ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

சமீபத்தில் இந்தக் குளக்கட்டுப் பாதை ஊடாக மோட்டார் சைக்கிளில் எதிரெதிரேவந்த இருவர் மோதுண்டு விபத்துக்குள்ளாகினர். அவர்களில் ஒருவர் குளத்துக்குள் வீழ்ந்து படுகாயமடைந்தார். இது போன்ற மேலும் பல விபத்துச் சம்பவங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. எனவே இந்தக் குளக்கட்டின் மேல் பயணம் செய்வதைத் தடுப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (த-352)

# முள்ளியவளை வித்தியானந்தாவில் ஆரம்பகால அதிபரின் நினைவுத் தூபி

புதுக்குடியிருப்பு,ஒக்.20

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் ஆரம்பகால அதிபர் எ.பி.எல்.ஞானப்பிரகாசத்தின் 45 ஆவது ஆண்டு நினைவு தின விழாவும் நினைவுத் தூபி திறப்பு விழாவும் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றன.

கல்லூரி அதிபர் கே.பி.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நினைவுத் தூபி அமைந்துள்ள வளாகத்தை முல்லைத்தீவு மாவட்ட 'நிகொட்' பணிப்பாளர் சி. இரகுநாதபிள்ளை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

ஆரம்பகால அதிபர் எ.பி.எல்.ஞானப்பிரகாசம் ஞாபகார்த்தமாக முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பொன்னம்பலத்தினால் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்து வைத்தார்.

நினைவுத் தூபிக்கான மலர் மாலையை முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி க.மார்க்கண்டு அணிவித்தார். தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நினைவுத் தூபிக்கு மலர்ச்செண்டு வைத்து அஞ்சலி செய்தார்.

நினைவுரைகளும் இடம்பெற்றன.

2004, 2005ஆம் ஆண்டுகளில் பல் கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய 65 மாணவர்களுக்கு அமரர் ஞானப்பிரகாசம் நினைவாகப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-353-203)

# முல்லைத்தீவில் காவல்துறையினர் வீதி ஒழுங்கு குறித்த கருத்தூட்டல்

புதுக்குடியிருப்பு,ஒக்.20

முல்லைத்தீவு பிரதேசத்தில் தமிழீழக் காவல்துறையினரால் வீதி ஒழுங்கு தொடர்பான கருத்தூட்டல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கும், வாகன உரிமையாளர்களுக்கும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதனைவிட தற்காலிக குடியிருப்புக்களில் வசிக்கும் மக்களுக்கு, எவ்வாறு குடியிருப்புகளிடையே போக்குவரத்துக்களை மேற்கொள்வது, உழவு இயந்திரம் செலுத்துவது என்பன தொடர்பாகவும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. (த-353-204)

# முழங்காவில் வைத்தியசாலையில் மாதந்தோறும் விசேட சிகிச்சைகள்

வெள்ளாங்குளம்,ஒக்.20

முழங்காவில் வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதமும் விசேட சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாதமும் வரும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் நோயாளர்களுக்கு எக்ஸ்ரே எடுத்தலும்-

ஒவ்வொரு மாதமும் வரும் 2ஆம், 4ஆம் வியாழக்கிழமைகளில் 'ஸ்கானிங்' செய்தலும் இடம்பெறும். என்றும் முழங்காவில் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள் உரிய நாள்களில் சென்று சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-415-203)

# திலீபன் மருத்துவ அபிவிருத்திக் குழுவினர் ஆழியவளையில் சுகாதார விழிப்புணர்வு

பரந்தன்,ஒக்.20

ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை அபிவிருத்திக் குழுவினர் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாமுனை, குடாரப்பு ஆகிய பகுதியில் மேற்படி குழுவினரால் விழிப்புணர்வுச் செயற்பாடு நடத்தப்பட்டது.

வீட்டுத்தரிசிப்பு, உளவளக் கருத்தூட்டல்கள், சூழல் சுற்றாடல் தூய்மை பேணல் நடவடிக்கைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுகள், சுகாதாரக் கருத்தரங்கு மற்றும் 'வருமுன் காப்போம்' தொடர்பான ஒளிப்படக் கண்காட்சி என்பன இடம்பெற்றன.

இச்செயற்பாடுகளில் ஆழியவளை திலீபன் மருத்துவ சேவையினர், வடமராட்சி கிழக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணியாளர்கள், தொண்டர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-352-203)




# கண்டாவளைப் பிரதேசமுன்பள்ளிகளின் ஒருங்கிணைந்த திறனாய்வுப் போட்டி

பரந்தன்,ஒக்.20

கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிகளின் ஒருங்கிணைந்த திறனாய்வுப் போட்டி கடந்த திங்கட்கிழமை தருமபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுக்குழுத் தலைவர் அருட்திரு பி.தேவராசா தலைமையில் நடைபெற்றது

நிகழ்வின் ஆரம்பத்தில் தருமபுரம் மேற்கு ஈழவேந்தன் முன்பள்ளியிலிருந்து முன்பள்ளிச் சிறார்களும் ஆசிரியர்களும் முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் மைதானத்திற்கு அழைத்துவரப் பட்டனர்.

நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரரின் பெற்றோரான பெருமாள் ஏற்றினார். மாவீரரின் திருவுருவப் படத்திற்கான ஈகைச் சுடரை கரைச்சி வடக்கு நிறுவன செயலாளர் தனலட்சுமி, கண்டாவளைக் கல்விக் கோட்ட அதிகாரி வீ.இராசகுலசிங்கம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்பள்ளிக் கொடி, புனர்வாழ்வுக் கழகக் கொடி என்பன ஏற்றப்பட்டன. ஒலிம்பிக் தீபம் கண்டாவளைப் பிரதேச செயலர் சீ.சத்திய சீலனால் ஏற்றப்பட்டது.

சிறார்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. அவர்களுக்குப் பரிசுளும் வழங்கப்பட்டன. ( 352-202)





இலங்கை வங்கியின் முல்லைத்தீவு மாவட்டக் கிளையில் 'பொன் அரும்பு' கணக்கு வைத்திருக்கும் காயத்திரி என்ற மாணவியைப் பாராட்டும் வைபவம் வங்கியில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவிக்கான 10 ஆயிரம் ரூபா பரிசிலையும் சான்றிதழையும் முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சநாகரத்தினம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் பிராந்திய முகாமையாளர் ச.திருச்செல்வம், வங்கி முகாமையாளர் லஷ்மண சர்மா மற்றும் வங்கி ஊழியர்களும் உள்ளனர். (படம்: புதுக்குடியிருப்பு செய்தியாளர்)

# போரினால் மிகவும் சீரழிந்த நிலையில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்!

## புனரமைக்குமாறு ஊரியான் மக்கள் கோரிக்கை



பரந்தன்,ஒக்.20

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஊரியான் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் போர்க்காலச் சூழலின்போது சேதமடைந்துள்ளது. இந்த மண்டபம் இதுவரை புனரமைக்கப்படவில்லை. கூரைகளே இல்லாமல் சுவர்கள் இடிந்த நிலையில் சீரழிந்து போயிருக்கிறது. இதனால் இக்கிராமத்தின் பொதுப் பணிகளை முன்னெடுப்பதற்கு முடியாமல் இருக்கிறது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனைப் புனரமைத்தால் அதன்மூலம் இக்கிராமத்திற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

எனவே யாராவது முன்வந்து இந்த ஊரியான் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தை புனரமைத்துத் தரவேண்டும் என்று இக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (3-352-202)

# விசுவமடுவில் தற்காப்புப் பயிற்சி

பரந்தன்,ஒக்.20

விசுவமடுப் பிரதேச மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி வழங்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தருமபுரம் மேற்கு கிராமசேவையாளர் நாகேந்திரம் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் ஏற்றினார்.

பயிற்சி ஆசிரியர் தயானந்தன் பயிற்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

இருநூறுக்கும் மேற்பட்டோர் பயிற்சிகளைப் பெற்றனர்.

கருத்துரையை விசுவமடுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் வ.பத்மநாதன் நிகழ்த்தினார். (த-352-204)

ஒக்டோபர் - வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

நானும் சில புத்தகங்களும்... வாசியுங்கள்!

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஸ்ரீ லங்கா ரெலிகொம் றேடியோ லைன் (R.L) தொலைபேசி இணைப்பு விற்பனைக்கு உண்டு. எப்பிரதேசத்திலும் இயங்க கூடியது: (021 222 xxxx) தொடர்பு 0773076874 (41673)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட 250 Yamaha மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: N.பிரபு, சென் செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P. 077 6570661 (41670)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் K.K.S, வீதிச் சந்திக்கு அருகில் 2 பரப்பு காணியும் 4200 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P. 011 2597183, 0115364293. (சி-45692)

## வாடகைக்கு

பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கில் அனைத்து வசதிகளும் கொண்ட (போக்குவரத்து வசதியுள்ள இடம்) வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2722 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (41672)

## திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் மணமக்களின் சுயதெரிவுக்கு இன்றே விரையுங்கள் தொடர்பு: த.சிவானந்தன் பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர்மடம். (41653)

## அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்பு கொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு Penquin Book Shop B2/F23, Bloementhal Flats, Colombo 13. T.P 0773081764, 2438367 Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி-45557)

## சமஸ்கிருத நூல்கள்

திராவிய சூடாமணி மீண்டும் வெளிவந்து விட்டது. லஷ்மி, மஹாமாரி, சாஸ்தா, தட்சணாமூர்த்தி, சண்டேஸ்வரர், துர்க்கா மண்டபப் பூஜைகள், தனித்தனியே ஸ்பர் சாகுதிப் புத்தகங்கள், ஸ்வரங்களுடன் வேதமந்திரங்கள், சிவன்யந்திர பூஜை முதலியன வெளி வந்து விட்டன. தொடர்புகளுக்கு: கோப்பாய் சிவம் கந்தசாமி கோயிலடி, இணுவில். தொலைபேசி 021 222 6004 (41605)

## எவரெஸ்ட் கருவேலன் பற்பொடி

முரசுகரைதல், வாய்நாற்றம், பல்வேதனை, பல்லறணை, பல்கூச்சம் ஆகியவற்றை நிவர்த்திப்பதுடன், பற்களையும் நன்கு மினிரச் செய்யும். சகல வியாபார நிலையங்களிலும் 25 கிராம், 15 கிராம் அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். (41316) (21.16.13)

## கேதார கௌரி காப்பு விரதம்

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் கடந்த 12ஆம் திகதி முதல் கேதார கௌரிகாப்பு விரத பூஜைகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும் இப்பூஜையின் போது ஆலயத்தில் மாலை 3 மணி முதல் விநாயகர் பூஜை, விக்ர பூஜைகள், காப்பு பூஜை மற்றும் விசேட தீபாராதனை என்பன இடம்பெற்று வருகின்றன. (த-29)

## பாராட்டுவிழா

கொடிகாமம் கோயிலாமனை அருள்மிகு மருதடி முனீஸ்வரர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேக காலங்களில் 'சிவனருட் செயல்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்திய யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியரும் வரணியூர் சைவப் புலவருமான சி.கா.கமலநாதனுக்கு பாராட்டுவிழா அண்மையில் இடம் பெற்றது. மேற்படி தேவாலய பிரதமகுரு சிவ ஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் பொன்னாடை போர்த்தி அவரை கௌரவித்தார். (த-170)

## நல்லாசிரியர் விருதுக்குத் தெரிவு

வரணி,ஒக்.20

வரணி குடமியன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் கே.குணசிங்கம் மற்றும் வரணி நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய ஆசிரியை திருமதி ம.செல்வரத்தினம் ஆகியோர் நல்லாசிரியர் விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இவர்களை இவ்விருதுக் குத் தெரிவு செய்துள்ளது. (த-170)

## யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

பாடசாலை அபிவிருத்திச் சங்க

### பொதுக் கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆண்டுப் பொதுக் கூட்டம் 06-11-2005 ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி/45814)(26-21-16) - செயலாளர்.

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 10 - 08 - 1940



விண்ணில் 20 - 09 - 2005

### அமரர் கந்தசாமி அரசரட்ணம் (றட்ணி)

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அன்புடன் எமை வளர்த்தெடுத்த தந்தையே
நீங்கள் இல்லையே! உங்கள் ஆத்ம அமைதிக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (21-16)

காளிகோயிலடி, திருநெல்வேலி. (41666)

தகவல்: மனோகரன் (மருமகன்)

## விற்பனைக்கு

மொத்த வியாபாரிகளின் நன்மை கருதி இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெட்சீற் வகைகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**

*42, 44, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்*

**T.P.No. 222 2985**

(சி-45811) (21.16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 24 ஆவதுபட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்றவரான

**செல்வி ஊர்மிளா நடராசா (B.A)**

(இடைக்குறிச்சி, வரணி)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி இராசேந்திரம் திருமதி சி.வள்ளிநாயகி
திரு.திருமதி.மனோகரன் திரு.திருமதி சிதம்பரநாதர்
திரு.திருமதி பரமானந்தர்

(சி-41676) (21-16)

# STUDY ABROAD

## வெளிநாட்டு கல்வி ஆலோசனை



- Switzerland
- United kingdom (UK)
- India
- Ukraine (Medical Degree)
- Canada
- Australia
- Malaysia
- New zealand

மேற்குறிப்பிட்ட நாடுகளில் Diploma அல்லது Degree பாடநெறிகளில்சேர்ந்து உங்கள் உயர்கல்வியை தொடரமுடியும். இவை தொடர்பாட விபரங்களைப்பெற அறியவாய்ப்பு

## யாழ்ப்பாணத்தில்.......

22ஆம் திகதி(சனிக்கிழமை) & 23ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : COSY Restaurant,,15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.

நேரம் : 22ம் திகதி சனிக்கிழமை-மாலை 3.30 pm - 6.30 pm
23ம் திகதி ஞாயிற்றுகிழமை-காலை 9.30 am - 1.30 pm

**Admissions Co-ordinated in Sri Lanka by**
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com Tel: 0777-767818

**Passport / Visa assistance provided**

யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்



# Style Park

*Perfect Collection*

## ஸ்ரைல் பார்க்



நீங்கள் குதூகலமாகக் குடும்பத்தினருடன் உங்கள்
ஆடைத் தேவைகளை நீங்களே தெரிவு செய்து மகிழ்ந்திட
யாழ். நகரில் ஒரே புடைவை விற்பனைக் காட்சியகம்

தீபாவளியை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383 இல. 171, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழ்த் தலைவர்களைக் கொலைசெய்துவிட்டு பழியைப் புலிகள் மீது போட ஜே.வி.பி. திட்டம்

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் குற்றச்சாட்டு



தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இணையத்தளம்மூலம் பிரசாரம் செய்யும் ஜே.வி.பியினர் தமிழ்த் தலைவர்களைக் கொலைசெய்துவிட்டு புலிகள் மீது பழி போட முனைகின்றனர். எதிர்வரும் 22ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுகளைக் குழப்பியடிப்பதே ஜே.வி.பியினரின் திட்டம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே ஜோசப் பரராஜசிங்கம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புலிகளின் தாகம் - தமிழீழத் தாயகம் என்ற நிலைப்பாட்டில் விடாப்பிடியாக நின்ற புலிகள் சமாதானப் பேச்சின் பின், நாட்டைப் பிரிக்காமல் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சிமுறையின்கீழ் பிரச்சினைகளைத் தீர்க்க விட்டுக்கொடுப்புடன் முன்வந்தனர். ஆனால், இலங்கை அரசு தமிழர்களின் உணர்வுகளை மதிக்கத் தயாராக இல்லை.

தமது தனிமனித உரிமைக்கும் ஜனநாயக உரிமைக்கும் உத்தரவாதம் அளிக்க அரசு தவறினால் தமிழர்கள் தமக்குரிய சுயாட்சியைத் தாமே தீர்மானித்துக்கொள்வார்கள் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

'பொங்குதமிழ்' விழா என்றவுடன் சிங்களத் தலைமைகள் ஏன் அப்படித் துடிக்கின்றன என்பது எமக்கும் புரியவில்லை. தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக சுதந்திரத்தையும், பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையும், தமது மொழி உரிமை, மத உரிமை என்பனவற்றையும் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தும் ஒரு நிகழ்வு தான் பொங்குதமிழ் விழா. அதில் நாம் நாட்டைப்பிரித்துக் கேட்கவில்லை. அந்த நிகழ்வை ஜே.வி.பியும் அரசும் இனவாத சாயம்பூசி தென்பகுதியில் பிரசாரம் செய்கின்றன.

இரண்டு சகாப்தங்களுக்கு மேல் அவசரகாலச் சட்டத்தின் கொடுமைகளை அனுபவித்தவர்கள் நாங்கள். அவசரகாலச் சட்டத்தை கையில்எடுத்துக்கொண்டு 60 ஆயிரம் அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்று குவித்தது இராணுவம்.

இராணுவம் செய்த கொலைகளை அவசரகாலச் சட்டத்தின்மூலம் சட்டபூர்வமான கொலைகள் என்று அரசு நியாயப்படுத்தியது. வடக்கு - கிழக்கில் மட்டும் அல்லாமல் தென்பகுதியிலும் இந்தச் சட்டத்தின்கீழ் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர். தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரச படையினரின் அடக்குமுறைகள் அதிகரித்துவிட்டன. கிழக்குப் பிராந்தியத்தில் அரச படைகள் சட்டவிரோதக் குழுக்களுக்கு ஆயுதங்களையும், தேவையான உதவிகளையும் செய்து இனப்படுகொலைகளுக்குத் தூபம் இட்டுவருகின்றன.

அதேவேளை, ஜே.வி.பியினர் மற்றுமொரு வழியில் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 14ஆம் திகதி 'லங்கா ட்ருத்' என்ற இணையத்தளத்தில் மிகவும் பாரதூரமானதும் விஷமத்தனமானதுமான செய்தியொன்றை அவர்கள் வெளியிட்டுள்ளனர். அதாவது, திருமலையில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தனையும், துரை ரட்ணசிங்கத்தையும் வன்னிப் புலிகள் கொலை செய்துவிட்டு ஜே.வி.பியினர் மீதும் அரசபடைகள் மீதும் அந்தப் பழியைப் போடத் திட்டமிட்டுள்ளனர் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

"ஐரோப்பிய யூனியன் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்க அனுதாபம் பெறுவதும் திருமலையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலையை அகற்றுவதுமே புலிகளின் இந்த நடவடிக்கையின் நோக்கம். இவை அரச புலனாய்வுத்துறையினர் மூலம் கிடைத்த தகவல் என்றும் அந்த இணையத்தளத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஜே.வி.பியினரின் திட்டமிட்ட ஒரு சதிச்செயல். புலிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்த வடக்குத் தமிழ்த் தலைவர்களைக் கொலைசெய்ய அவர்கள் திட்டமிட்டுள்ளனர். எதிர்வரும் 22ஆம் திகதி திருகோணமலையில் பொங்கு தமிழ் விழா இடம்பெறவுள்ளது. ஆளுநரின் வாசஸ்தலத்திற்கு அருகிலேயே இவ்விழா நடைபெறவுள்ளது. ஆளுநருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விழாவில் கலந்துகொள்ளும் அரசியல் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அரசாங்கம் போதியளவு பாதுகாப்பு வழங்கவேண்டும்.

(க)

# பொலீஸார் அல்லாத குண்டர்கள் தமிழர் விவரம் திரட்டுவது எதற்கு?

## இராதாகிருஷ்ணன் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஒக். 20

கொழும்பில் வாழும் தமிழர்களிடம் பொலீஸார் அல்லாத குண்டர்களும் தனிச் சிங்களத்திலான படிவங்களை வழங்கி விவரம் திரட்டுகின்றனர். இரண்டு நாள்களுக்குள் விவரம் தரவேண்டும் என்று மிரட்டுகின்றனர். இவ்வாறு விவரம் திரட்டப்படுவதன் நோக்கம் என்ன? என்று கேள்வி எழுப்புகிறார். மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தில் உரையாற்றும்போதே இராதாகிருஷ்ணன் எம்.பி. பொலீஸ்மா அதிபர்மீது குற்றம் சாட்டினார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

நாட்டின் எந்தப் பகுதியில் ஒரு கொலை நடந்தாலும் அதனைப் புலிகள்தான் செய்தனர் என்று திட்டவட்டமாகக் கூறிவிடுகின்றனர். அண்மையில் மட்டக்குளி மோதர பிரதேசத்தில் வெடிகுண்டுகளும் ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றை அங்கே கொண்டுவந்து பதுக்கி வைத்தவர்கள் யார்? எதற்காகக் கொண்டுவரப்பட்டன என்பதைக் கண்டுபிடிக்கவேண்டிய பொலீஸார் இப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களை விசாரணை என்ற பெயரில் துன்புறுத்துகின்றனர்.

அவசரகாலச் சட்டம் இன்று தமிழ் மக்களுக்காக மட்டுமே கொண்டுவரப்பட்டது போல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தலைநகரின் பல பகுதிகளிலும் வாழும் தமிழர்கள் தம்மைப் பற்றிய விவரங்களைப் பொலீஸில் பதியவேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். சில இடங்களில் பொலீஸார் அதற்கான விண்ணப்பங்களை விநியோகிக்கின்றனர். பல்வேறு குழுக்கள் இப்படியான விண்ணப்பங்களை தமிழர்களின் வீடு வீடாகச் சென்று வழங்குகின்றனர். இவ்வாறு வழங்கப்படும் படிவங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவையாக இல்லை. இடத்திற்கிடம் மாறுபட்டனவாகவே காணப்படுகின்றன.

பொலீஸுடன் சிறிதும் தொடர்பு இல்லாத குண்டர்களும் தமிழர்களின் வீடுகளுக்கு வந்து தனிச் சிங்களத்திலான படிவங்களை வழங்குகின்றனர். இரண்டு நாள்களுக்குள் வருவோம் தயாராக வைத்திருக்கவேண்டும் எனவும் அவர்கள் அச்சுறுத்திச் செல்கின்றனராம்.

தமிழர்களைப்பற்றி இவர்கள் பெறும் விவரங்கள் உண்மையாகவே பொலீஸ் நிலையங்களுக்குத்தான் செல்கின்றனவா? அல்லது வேறு நோக்கங்களுக்காகத் திரட்டப்படுகின்றனவா என்பதுதான் தெரியவில்லை.

தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற முறையில் இவ்விடயம் தொடர்பாகப் பொலீஸ்மா அதிபருக்கு பல கடிதங்களை அனுப்பியும் அவற்றுக்கு இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லை. இவர்கள் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவர் என்ற நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம்.

எனவே, சட்டம், ஒழுங்கு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சராவது பொது மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என இராதாகிருஷ்ணன் எம்.பி கோரிக்கை விடுத்தார்.

(க)

# அவசரகாலச் சட்டம் நவம்பர் 13இற்குப் பின் நீடிக்காது

# கதிர்காமரின் கொலை தொடர்பாக மேலும் பலர் கைது செய்யப்படுவர்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு!

"முன்னாள் அமைச்சர் கதிர்காமரின் படுகொலைச் சூத்திரதாரிகள் பலர் மேலும் கைது செய்யப்படவுள்ளனர். இக்கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூலம் பல விவரங்கள் கிடைத்துள்ளன." - என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை அமைச்சர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

முன்னாள் அமைச்சர் கதிர்காமரின் கொலை தொடர்பான விசாரணைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. இதுவரை பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இக்கொலைக்கான சூத்திரதாரிகள் வெகுவிரைவில் கைது செய்யப்படவுள்ளனர்.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதே அரசியல் தலைவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. பொலீஸார் மூவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கில் இரண்டு தமிழ் அதிபர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். புலிகள் தொடர்ந்தும் சிறுவர்களை தமது இராணுவத்தில் சேர்த்துக் கொள்கின்றனர். இப்படியான நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவேண்டும். இதற்காகவே அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கு அனைவரும் ஆதரவளிக்கவேண்டும்.



நாடாளுமன்றிலிருந்து...

# தமிழ் எம்.பிக்கள் பயங்கரவாதிகளா?

## *படையினர் கெடுபிடி ஏன் என்று கனகரட்ணம் வினா*

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளா? எம்மை மட்டும் படையினர் துருவித்துருவி சோதனை இடுவது ஏன்? இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையே மீறும் ஒரு செயல். இதற்கு தொடர்ந்தும் இடமளிக்கக் கூடாது. - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. கனகரட்ணம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் இவ்வாறு குறிப்பிட்ட கனகரட்ணம் எம்.பி., ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முகம் கொடுக்கும் அசௌகரியங்களைச் சபையில் விளக்கினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லர். அவர்கள் மக்களின் பிரதிநிதிகள். நாடாளுமன்றம் கூடும் காலங்களிலும், ஏனைய நாள்களிலும் நாம் கொழும்புக்கு வந்துபோக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எமக்கு நாடாளுமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட விசேட அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், ஓமந்தைச் சோதனைச் சாவடியில் கடமையில் இருக்கும் இராணுவத்தினர் இந்த அடையாள அட்டைகளை உதாசீனப்படுத்துகின்றனர்.

நாம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றாலும் அதனை அவர்கள் சட்டை செய்வதில்லை. பொதுமக்கள் முன்னிலையில் அகௌரவமான முறையில் நடத்துகின்றனர். அதேவேளை, சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லும் போது எந்தவிதமான சோதனைகளும் இன்றி கௌரவமாக வழிநடத்துகின்றனர். ஏன் இந்தப் பாகுபாடு? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயங்கரவாதிகளா? நாங்கள் என்ன வெடி குண்டுகளையும், ஆயுதங்களையுமா கடத்திச் செல்கின்றோம்.?

இராணுவத்தினர் அவசரகாலச் சட்டத்தை தமது கைகளில் எடுத்துக்கொண்டு எமக்குத் தொல்லை கொடுக்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எமது சிறப்புரிமைகளைப் பாதுகாக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்புச் சட்ட ஒழுங்குகளுக்கும் பொறுப்பான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இது தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவித்தல்களை வழங்கவேண்டும் எனவும் கனகரட்ணம் எம்.பி சபையில் வேண்டுகோள்விடுத்தார்.

(க)

# விஷப் பாம்புகளான சிங்களத் தலைவர்களை நம்புவதற்குத் தமிழர்கள் ஏமாளிகளல்லர்!

## ஈழவேந்தன் எம்.பி. சபையில் காட்டம்



விஷப் பாம்புகளான சிங்களத் தலைவர்களை நம்ப தமிழ்மக்கள் ஏமாளிகள் அல்லர். ஆட்சி அதிகாரத்தில் மட்டும் குறியாக இருக்கும் இத்தலைவர்களுக்கு தமிழ் மக்களின் மனிதாபிமான உரிமைகளைப் பற்றிய அக்கறை சிறிதும் கிடையாது என்று சாடுகின்றார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே ஈழவேந்தன் எம்.பி இப்படிக் குற்றஞ்சாட்டினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது தெரிவித்ததாவது:-

தெற்கில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

யாருக்கு வாக்களிப்பது என்று சிங்களவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பற்றி சிறிதும் அலட்டிக்கொள்ளவில்லை.

ரணில் விக்கிரமசிங்க விஷம் கக்கும் புடையன் பாம்பு என்றால், மஹிந்த ராஜபக்ஷ விஷம் கக்கும் நாகம். இருவருமே விஷம் கக்கும் பாம்புகள். இவர்களை நாம் எப்படி நம்புவது? தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற நோக்கம் சிங்களத் தலைவர்களிடம் சிறிதும் கிடையாது.

தமிழ் மக்களைக் காக்கும் ஒரே தலைவன் - தமிழ்த் தேசியத்தின் தேசியத் தலைவன் - பிரபாகரன் மட்டுமே என்பதை தமிழ் மக்கள் என்றோ தீர்மானித்துவிட்டனர் என்று கூறினார் ஈழவேந்தன் எம்.பி.

(க)



பாராட்டி வாழ்த்துகிறோம்

அரியாலை
ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மாணவன்
திரு.திருமதி தேவராசாவின் மகன்

## தனோஜன்

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தமையையிட்டு அவரை
வாழ்த்துவதோடு, அவருக்கு ஊக்கமளித்த
பாடசாலை அதிபர் அவர்களுக்கும் அவரை ஊக்குவித்த ஆசிரியர்
அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்
கின்றோம். மேலும் இவர் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென
இறைவனை இறைஞ்சி வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணன்மார், அத்தை,
மச்சான் பாபு, மைத்துனிமாராகிய சூட்டி, தங்கா,
குமுதா, பரணி மற்றும் மாம்பழம் சந்தி அன்பு
உள்ளங்களும் சிறி நகைமாடம், அன்னை ஸ்ரோர்ஸ்.

"அன்னை இல்லம்"
இல.154, கண்டி றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(41679) (24-26-15-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருகோணமலை/ஸ்ரீ/சண்முகா
இந்து மகளிர் கல்லூரியில்
கல்வி பயின்ற மாணவி

செல்வி

### கோவிந்தராஜன் மிதுலா

*2005 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி எய்தியமையையிட்டு அவரை வழிநடத்திய பெற்றோர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துவோர்:
அம்மம்மா, அப்பப்பா,
அன்ரிமார், மாமாமார்

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி,
(41680)(26-15-34)

## கிளை அமைப்பதற்கான கட்டட ஒப்பந்த காரர்களிடம் விண்ணப்பம் கோரப்படுகிறது

30 அடி நீளமும் 16 அடி அகலமும் 8 அடி உயரமும் கொண்ட கிளை ஒன்றினை அமைப்பதற்கு அரச பதிவு பெற்ற கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இது தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள எமது சங்கத்தின் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
தலைவர்,
மானிப்பாய் பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
பிரதான வீதி, மானிப்பாய்.

(சி/45815)(26-15-34)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
10 - 04 - 1926



விண்ணில்
06 - 10 - 2005

பிரதான வீதி, கந்தவனக் கடவை பொலிகண்டியைச் சேர்ந்த

### அமரர் செல்வராசா கந்தசாமி

(வீபூதிச் சாத்திரியார் ஐயா)

இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து
நல்லறத்தில் ஆண்டு பல கழித்து
விதியவன் வினைப்பயனால்
விண்ணுலகுக்குச் சென்றுவிட்ட உங்களது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதான வீதி,
கந்தவனக் கடவை,
பொலிகண்டி. (41677)(26-15-34) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரஸ்வதி தம்பித்துரை

எமது பாடசாலையின் திட்டமிடல் நிதிஉதவியாளர் **திருமதி முருகானந்தன் மோகனலட்சுமி** அவர்களின் அன்பு அன்னை அமரத்துவம் அடைந்தமையை இட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
சென்ஜேம்ஸ் மகளிர்
பாடசாலை.

(41683)(26-16)

# நீர்கொழும்பு- திருமலையை இணைத்து நெடுஞ்சாலை

கொழும்பு,ஒக்.20

நீர்கொழும்பையும் திருகோணமலையையும் நேரடியாக இணைக்கும் வகையிலான நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணிக்க அரசு முடிவுசெய்திருப்பதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

கடந்தவாரம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற நுகர்வோர்- வர்த்தக சந்திப்பு நிகழ்வை ஆரம்பிக்கையிலேயே நிதியமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

இந்த நெடுஞ்சாலையை அமைப்பதற்குத்தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி கவனம் செலுத்திவருகிறார். கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான நிதியை, வெளிநாட்டு உதவி அன்பளிப்பு மற்றும் உள்நாட்டு சேமிப்பு ஆகியவற்றின் மூலம் திரட்டமுடியு மென அரசு நம்புகிறது. இந்த நுகர்வோர்-வர்த்தகர் சந்திப்பு மூலமாக நிர்மாணத்துறையினருக்கும், வழங்கல் துறையினருக்கு மிடையேயான இணைப்பைப் பலப்படுத்துவதன் மூலம் தரமான பொருள்களை கொண்டு சிறப்பான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இயலுமென நம்புகின்றோம்-

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (ஐ- 205)

## பொது அறிவுப் பரீட்சை முடிவுகள்

ஊர்காவற்றுறை,ஒக்.20

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன அந்த முடிவுகள் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

ந.சயந்தா - கரம்பன் (சண்முகநாதன் மகாவித்தியாலயம்,), ச.ராகவன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), த.வித்தியாகரன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி)

**மத்திய பிரிவு**

ம.மேரி டிசானி (ஊர்காவற்றுறை சென்மேரிஸ் வித்தியாலயம்),வி.பாலேந்திரன் (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), ம.மரின் தர்மிகா (ஊர்காவற்றுறை சென்மேரிஸ் வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

அ.மேரி கொன்செப்ரா (ஊர்காவற்றுறை சென்மேரிஸ் வித்தியாலயம்), கீ.சுரேஸ் (காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி), பு.சயந்தன் (கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியால யம்). (த)

## 'தேனமுதம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கலை மாணவர் மன்றத்தினர் 'தேனமுதம்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர் வரும் திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் மன்றத் தலைவர் வி.டினேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு யாழ்.பல்கலைக் கழக புவியியற்துறை சிரேஷ்ட பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்திரனராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2005 இல் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை மாணவச் செல்வங்களான......*

| | | |
|---|---|---|
| செல்வி சகிலா சிவசுப்பிரமணியம் | - | 159 புள்ளிகள் |
| செல்வன் நந்தகுமார் சாயீசன் | - | 141 புள்ளிகள் |
| செல்வி கீர்த்தனா இரவீந்திரன் | - | 140 புள்ளிகள் |
| செல்வி பவித்திரா கோகுலானந்தன் | - | 140 புள்ளிகள் |
| செல்வன் பத்மராசா தனுஷன் | - | 139 புள்ளிகள் |
| செல்வி சிறீகௌரி சுப்பிரமணியக்குருக்கள் | - | 130 புள்ளிகள் |
| செல்வி தன்சிகா மதியழகன் | - | 127 புள்ளிகள் |
| செல்வி யாழினி அன்பழகன் | - | 125 புள்ளிகள் |

*இவர்களுடன் அண்மித்த புள்ளிகளைப் பெற்ற செல்வி திரியம்பகா ஸ்ரீதரன், செல்வி கீர்த்திகா ஜெயபாலசிங்கம், செல்வன் செல்வராசா சுலக்சன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்குக் கற்பித்து ஊக்கம் அளித்த பாடசாலை அதிபர், அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.*

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.

(41681)
(39-26-15-34)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வது)

# பதவி வெற்றிடம்

அதிபர் - 121/03

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்படிவத்தை ரூபா 10/- செலுத்தி சபையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை **செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையில் அதிபர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 05-11-2005.

சம்பள அளவுத்திட்டம் : 31/99 இன்படி 8000/- 200/- X 10- 230 X 10- 12300/- (இத்துடன் கூ.வே.ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சபையால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 30-50 வரை

**தகைமைகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் 4 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 3 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 5 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் கற்பித்தல் துறையில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். இதில் சிரேஷ்ட முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு காலக் கட்டாய அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் பிரிவுச் சன்றிதழ் / க.பொ.த.பரீட்சையில் 3 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 12 ஆண்டு கால அனுபவம். இதில் சிரேஷ்ட முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு கால அனுபவம்.

- கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
- தெரிவு செய்யப்படுபவர் சபையால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.
- நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக நிறுவனத்தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/45820)(26-15-34)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்.


2005 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று, எமது வித்தியாலயத்திற்குப் பெருமை தேடித்தந்த

ச. சிவகாந்தன் - 140, மோ. அனுசாயினி -136, யோ. விதுஷா-129

ஆகியோரையும் இதற்கு நெருங்கிய புள்ளிகள் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களுக்குப் பயிற்சியளித்த ஆசிரியை திருமதி செ.சோமசேகரம் மற்றும் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/சுந்தரமூர்த்தி நாயனார்வித்தியாலயம், காரைநகர்.
(41685) (54-11-17)

## துயர் பகிர்கின்றோம்



எமது பயிற்சி இணைப்பாளர், விரிவுரையாளர்
மதிப்பிற்குரிய எஸ். இராஜேந்திரா
அவர்களின் அன்புச் சகோதரர்
**எஸ். மகாதேவா** அவர்கள்

15.10.2005 சனிக்கிழமை அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அமரரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பிராந்திய பயிற்சி நிலையம்*
*யாழ்ப்பாணம்.*
(41695) (54-11-17)
பொதுச் சுகாதார பரிசோதகர்கள். (பயிற்சி)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்
செல்வி க. உஷாநந்தியின் தந்தை
**பொன்னையா கந்தசாமி**
அவர்கள் 13.10.2005 இல் அமரத்துவம் எய்தினார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன் புரிக்கழகம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.
(41698) (54-11-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 - 02 - 1955
மறைவு 20 - 09 - 2005

### திருமதி குணலிங்கம் சரஸ்வதி

நிதமும் ஏங்குகிறோம் பெரியம்மா பெரியம்மா என்று
எம் மனதில் எண்ணியிருந்தோம் எங்களுடன்
வந்து எங்கள் குசலம் விசாரிப்பார் என்று
எங்கள் இல்லத்தில் எங்களம்மா வந்திருந்தால்
எங்கள் எல்லோரையும் கட்டி மோந்து
கனிவான வார்த்தைகள் சொல்லி
கலகலவென சிரித்திடுவா
எங்கள் இதய நினைவெல்லாம்
கனவாக போனதம்மா காலனவன்
கடிகாரம் பார்த்திருந்தான் கண்ணிமைக்கும்
நேரமதில் கவர்ந்திட்டான் இனிஎங்கு
எம் பெரியம்மாவை காண்போம்
என்று ஏங்குகின்றோம்......
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:* கந்தரோடை, சுன்னாகம்.
*நிரந்தர முகவரி:* மறவன்புலோ, சாவகச்சேரி.
தகவல்: பெறாமக்கள்.
(41692) (54-11-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 - 02 - 1955
மறைவு 20 - 09 - 2005

### திருமதி குணலிங்கம் சரஸ்வதி

*வளம் கொழிக்கும் தென்மராட்சி*
*மறவையூர் தனில் சட்டநாதர் குடும்பத்தில்*
*சிரேஸ்ட மகளாக வந்துதித்தீர்*
*கொல்லங்கலட்டிதனில் ஆறுமுகம் குணலிங்கம்*
*என்னும் கொளுந்தனை கரம் பிடித்தீர்*
*இன்று ஜேர்மன் மண்தனில் வாழ்ந்திருந்தீர்*
*தேசத்தாரோடெல்லாம் பற்றுவைத்து*
*தாமரை மலர் முகம்போல் மலர்ந்தீரம்மா,*
*திங்கள் புரட்டாதியில் செவ்வாய்க்*
*கிழமை செம்மேனி ஈசனார் பாதம் சென்றதம்மா.*
சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (20.10.2005) ந.ப. 12 மணிக்கு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:* கந்தரோடை, சுன்னாகம்.
*நிரந்தர முகவரி:* மறவன்புலோ, சாவகச்சேரி.
(41691) (54-11-17)
தகவல்: தந்தை, தாய், சகோதரர்கள்.

# உதைபந்தாட்டம்

சாவகச்சேரி,ஒக்.20

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் 12,14,16,18 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிகள் பங்கேற்கும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றே. இருதயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. - இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் இ. கயிலைநாதன் கலந்து கொள்ளவார்.

(ஓ-31)


## Sierra Cables Limited

பங்கு விற்பனை ரூபா 03.00

Sierra Cables Limited ஆனது தனது 200,000,000 பங்குகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்கிறது. ரூபா 1.00 பெறுமதியுடைய (Par Value) பங்கு ஒன்றின் விற்பனை விலை ரூபா 3.00, குறைந்த பட்சம் 1000 பங்குகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

உங்கள் விண்ணப்பங்களை 25.10.2005 இற்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக ளுடன் தொடர்பு கொண்டு சமர்ப்பிக்கவும்.

1. Bartleet Mallory Stock-brokers (PVT) Ltd.
**Branch Office**
No. 866, Point Pedro Road, Jaffna.
**Agent Office**
Euroville Investments (PVT) Ltd.
No. 866, Point Pedro Road, Jaffna.

மேலதிக விவரங்களுக்கு:
021 222 7012,
Or Hotline
A. அரிகரன் - 0773130061

(சி-45820) (54-11-17)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20-09-2005அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்
**செல்லையா சங்கரப்பிள்ளை**
அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (20-10-2005) வியாழக் கிழமை பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

பாலாவோடை,
உடுவில் தெற்கு.
குடும்பத்தினர்.
(41699) (54-11-17)


**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை**
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா நடித்த
3 ஆவது ஜனத்திரள் வாரம்
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30 மட்டும்.

**மனோகரா** யாழ்ப்பாணம்

பார்த்திபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)


## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1957 - 03 - 18
மறைவு 2004 - 10 - 20

அமரர். செ. அன்ரன் கிறிஸ்தோப்பர்

"எம் உறவை விட்டு பிரிந்த எம் தந்தையே!
ஆண்டு ஒன்று அகன்றாலும் ஆண்டாண்டு
காலத்துக்கும் ஆறாது எமது துயரம்
அணையாது உம் நினைவு"

என்றும் உம் நினைவுகளில் வாழும்
மனைவி, பிள்ளைகள்
தாய் தந்தை, சகோதரர்கள்
(41636)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஞானேஸ்வரி கிருஷ்ணா

"உமா இல்லம்" மயிலியதனை, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும், தற்பொழுது இல. 6/6 A, குறுக்கு வீதி, கல் கிசையில் வசித்தவருமாகிய திருமதி ஞானேஸ்வரி கிருஷ்ணா அவர்கள் 17.10.2005 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் சுப்பிரமணியம் -வள்ளி யம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருளம்பலம் -வள்ளியம்மாள் தம்பதியரின் அன்பு மருகளும், உமாதேவியின் அன்புத் தாயாரும், இந்திரலிங்கத்தின் அருமை மாமியாரும், மகேசனின் ஆசை அம்மம்மாவும் ஆவார். இவர் குமரகுரு, காலஞ்சென்ற கமலம், சுந்தரி, சரஸ்வதி, இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்தா தேவி, நிர்த்தனசுந்தரம், செல்வேந்திரா, பத்மா, காலஞ்சென்ற சிவராசா, சரஸ்வதி மயில்வாகனசுந்தரம், கமலம் வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசையிலுள்ள இல.6/6A , குறுக்கு வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (20.10.2005) வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கல்கிசை.*
(41693) (54-11-17)
தகவல்: மகள், மருமகன், பேரன்.
011-2724493

### அப்பையா இராசையா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா இராசையா நேற்று (19.10.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும், கந்தையா, காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் இராசமணி, தம்பிஐயா பரமேஸ்வரி, சீவரத்தினம், நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசுப்பிரமணியம், சுசீலா, விஜியலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சண்முகரத்தினசிங்கம், தேவராசா கமலரத்தின தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோமேஸ்வரன் (ஆசிரியர், துணுக்காய்), விக்னேஸ்வரன் (ஆசிரியர்-மல்லாகம் மகாவித்தியாலயம்), பிரகாஷ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், முல்லைத்தீவு), தினேஷ்ஜெயராஜ், அசோக்குமார், மயூரி, விதுஜா, விஜயராகவன், அருந்ததி, குகன், முரளி, கௌரிமோகன், விஜிதா, சுரேஷ், தர்ஷினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2005) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
(C/45825) (54-11-17)
தகவல்: குடும்பத்தினர்.

### நவரட்ணம் மதியாபரணம் (வன்னியசிங்கம்)

(ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள கட்டட மேற்பார்வையாளர், (ஓவசியர்)



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் மதியாபரணம் அவர்கள் நேற்று (19.10.2005) புதன் கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நவரட்ணம் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கௌசலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இரத்தினம் நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவரான இராஜேஸ்வரியின் தம்பியும் காலஞ்சென்றவரான குலசிங்கம், ஜெயசிங்கம் (கொழும்பு), அம்பிகா (இந்தியா) ஆகியோரின் அண்ணனும், நகுலேஸ்வரி, மகாதேவன், சகுந்தலாதேவி, சறோஜா தேவி, கிருஷ்ணகுமார்,உமாதேவி, யசோதா, காலஞ்சென்றவர்களான பேரின்பதேவி, வாமதேவன் ஆகியோரின் மைத்துனரும் கோபாலகிருஷ்ணன் (கனடா), இராதாகிருஷ்ணன் (கனடா), காலஞ்சென்றவரான ரூபகிருஷ்ணன், கிருஷ்ணபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சஜித்தா (கனடா), காயத்திரி (கனடா), ஆகியோரின் மாமனாரும் சகானா (கனடா), நிரேஸ் (கனடா), கரன் (கனடா), நிரோஸ் (கனடா), ராகேஸ் (கனடா) ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.10.2005) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் (S.L.T) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு*
*கோண்டாவில்.*
(C/41701) (54-11-17)
தகவல்: ம. இராதாகிருஷ்ணன் (மகன்).

# யாழ். போதனாவைத்தியசாலையில் சீரற்ற நிலையில் உள்ளகப் பாதைகள்

யாழ். போதனா வைத்தியசாலையின் உள்ளக சிமெந்துப் பாதைகள் குன்றும் குழியுமாகவுள்ளன. இப் பாதைகள் வழியாகவே நோயாளர்களை விடுதிகளுக்கு 'ஸ்ரெச்சர்' மூலம் எடுத்துச் செல்கின்றனர். பாதைகள் சேதமடைந்திருப்பதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று கூறப்படுகிறது.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலிருந்து நோயாளர்களை 'ஸ்ரெச்சர்' மூலம் எடுத்துச் செல்லும் பாதைகள் சீரற்ற நிலையில் உள்ளதால் நோயாளர்களும், அவர்களை விடுதிகளுக்கு எடுத்துச்செல்லும் மருத்துவமனை ஊழியரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வைத்திய சாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

மேற்படி பாதை புனரமைப்புத் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். இருப்பினும் அப்பாதையை உடனடியாக சீர் செய்ய முடியாத நிலை உள்ளது. விடுதிகளுக்குச் செல்லும் பாதைகள் இவ்வாறான நிலையில் காணப்படுவதால் அதனைப் புனரமைப்புச் செய்யும் போது மாற்றுப் பாதைகளை அமைக்க வேண்டியுள்ளதே அதற்குக் காரணமாகும். இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

பெரும்பாலும் ஜனவரி மாதமளவில் இப் பாதைகள் சிறந்த முறையில் புனரமைப்புச் செய்யப்படும் என்றார் நிர்வாக உத்தியோகத்தர். (ஒ-13)

# புனரமைக்கப்பட்ட பாலங்களில் வாகன விபத்துகள் அதிகரிப்பு

## வேகத்தைக் குறைக்கச் சாரதிகளுக்களுக்கு அறிவுறுத்து

சாவகச்சேரி,ஒக்.20

யாழ். குடாநாட்டில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இரும்புப் பாலங்களில் மழைவேளையில் செல்லும் வாகனங்கள் விபத்தை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக வாகனச் சாரதிகள் கூறுகின்றனர்.

இந்த பாலங்களின் தரைப்பகுதிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள இரும்புத் தகடுகளில் மழை காலங்களில் வாகனச் சக்கரங்கள் வழுக்கிச் செல்வதாக அவர்கள் தெரிவித்தனர். குறிப்பாக கைதடி மற்றும் நாவற்குழிப் பாலங்களில் மோட்டார் சைக்கிள்கள் சிறிய ரக ஹயஸ் ரக வான்கள் போன்றவை விபத்துக்குள்ளாகின்றன.

கடந்த வாரம் மட்டும் இரண்டு வான்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்துகளின் போது உயிரிழப்பும் இடம்பெற்றுள்ளது.

இப்பாலங்களில் பயணிக்கும் வாகனங்கள் வேகமாகச் செல்வதாலேயே விபத்து ஏற்படுவதாகவும் - பாலத்தின் மீது செல்லும் போது முடிந்தவரை பிரேக் பயன்படுத்தாது சென்றால் விபத்து ஏற்படுவதைத் தடுக்க வாய்ப்புள்ளதாகவும் - அனுபவமிக்க சாரதிகள் கூறுகின்றனர். (ஒ-31)

## பிரதமர் மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் எம்.பிக்களான சுனில் ஹந்துன்னெத்தி, ராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோரும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். அங்கு விமல் வீரவன்ஸ மேலும் கூறியதாவது:-

அமைதிப் பேச்சுகளின்போது புலிகளிடம் அடிபணிந்து செயற்பட நாம் தயாரில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்போல் புலிகளிடம் மண்டியிடாமல் நேராக, தைரியமாக, உறுதியுடன் அமைதிப் பேச்சுகளை நாம் மேற்கொள்வோம்.

இதுவரைகாலமும் தேசியவாதிகள் எதிர்பார்த்திருந்த விடயங்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளார். அந்தக் கொள்கைகள் அனைத்தையும் அவர் நிறைவேற்றுவாரென ஜே.வி.பி. உறுதியளிக்கிறது.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ மேலும் கூறினார். (க)

# மஹிந்தவை ஆதரித்து நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அநுரா

கொழும்பு,ஒக்.20

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மீரிகமவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க பங்கேற்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்பாக கடுமையாக விமர்சித்தவரான அநுரா பண்டாரநாயக்க, அவருக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் முதன்முதலாகக் கலந்துகொண்டுள்ளார்.

அங்கு அமைச்சர் உரையாற்றியபோது தெரிவித்ததாவது:-

இந்நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்குமுன்னரே 1935ஆம் ஆண்டில் அரச மந்திராலோசனைச் சபையில் வைத்து இந்நாட்டிலுள்ள சிறுபான்மையின மக்களுக்குஅதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பற்றி எனது தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பிரஸ்தாபித்துள்ளார். 1958ஆம் ஆண்டில் பிரதமராக அவர் இருந்தபோது, பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த மும்முரமாக முயன்றார்.

ஆனால், ஐ.தே.கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளினதும் ஏனைய சிலரதும் எதிர்ப்புக் காரணமாக அது கைவிட்டுப் போனது. அன்று அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டிருக்குமாயின் இன்று பயங்கரவாதம் இந்தளவுக்குத் தலைதூக்கி இருக்கமாட்டாது. எனது தாயார் இந்த நாட்டில் 17 ஆண்டுகள் பிரதமராகப் பதவிவகித்துள்ளார், எனது சகோதரி இரு தடவைகள் ஜனாதிபதியாக இந்நாட்டு மக்களால் தெரிவாகியுள்ளார். இவற்றை உதாரணமாக்கி ஒருசிலர் சுதந்திரக் கட்சி எமது பாரம் பரிய சொத்து என்று கூறிவருகின்றனர்.

நாட்டு மக்கள் எம்மிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும்போது ஏற்றுக்கொள்கிறோம். அவர்கள் விரும்பாதபோது கைவிட்டுச் செல்கிறோம். இதுவே யதார்த்தம் 15 ஆண்டுகளாகத் தேர்தல்களை நடத்தியுள்ள நாம் இன்று குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து உரையாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலைப்பாடு தொடரத்தான் வேண்டுமா?

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு நானே ஆலோசனை வழங்கினேன். இன்று பல அரசியல் கட்சிகள் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன. ஆயினும் அவருக்கு ஒத்துழைப்பு நல்கும் சில கட்சிகளின் கொள்கைகள் எனக்கு ஏற்புடையவையல்ல. ஆயினும், கம்பஹா மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ பெருமளவு வாக்குகளைப் பெறுவார் என்று உறுதி வழங்குகிறேன். அவரை ஜனாதிபதியாக்க ஒத்துழைப்பு நல்குமாறும் வேண்டுகிறேன் இவ்வாறு அநுரா தெரிவித்தார். (ஒ)

## மாலைதீவுக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க நேற்றுக்காலை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மாலைதீவுக்குப் பயணமானார்.

மாலைதீவில் அந்நாட்டு ஜனாதிபதி மஹ் மூத் அப்துல் கையூமை சந்திக்கவுள்ள அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, இரு நாட்டு உறவுகளை மேம்படுத்துவது பற்றியும் பேச்சு நடத்தவுள்ளார்.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள முன்னர் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தமது சகோதரியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுடன் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து தொலைபேசியூடாகக் கலந்துரையாடியிருக்கிறார் என நம் பகரமாகத் தெரியவருகிறது. (க)

## மஹிந்த வெளியிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க. கேகாலை மாவட்டம் ரம்புக்கன தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனிப்பட்ட சிந்தனைகளுக்கு வாக்களிக்க நாம் தயாரில்லை. இது சோமவன்ஸ அமரசிங்கவின் கொள்கையா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையா, ஜே.வி.பியின் கொள்கையா என்பது தெரியவில்லை.

எந்தவொரு நபருக்கும் தனியான சிந்தனை இருப்பதை நான் எழுதிய 'அரசியலும் தர்மமும்' என்ற நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். எனது சிந்தனையை வெளிப்படுத்திய அந்த நூலுக்காக வாக்களிக்குமாறு நான் மக்களிடம் கோரவில்லை. மக்களின் பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வை முன்வைத்து நான் மக்களின் ஆதரவை கோருகிறேன். செய்ய முடிந்தவற்றையே நான் கூறியிருக்கிறேன்.

- இவ்வாறு ஐ.தே.க. தலைவர் மேலும் கூறினார். (க)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேத் தூதரகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்.எஸ்.ஜெயவர்த்தனா என்பவர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 250இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம உத்தியோகத்தர் தனது பணி நிமித்தம் செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே ஆள் நடமாட்டம் குறைந்த இடத்தில்வைத்து இனந்தெரியாதோரின் வேட்டுக்குப் பலியானார் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ)

## சிங்களவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

முஸ்லிம்கள் சம்பந்தமான காத்திரமான யோசனைகள், அவர்களின் பாதுகாப்பிற்கான உத்தரவாதங்கள், பிரதமரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை. முஸ்லிம்களுக்கான சுயாட்சி மற்றும் அவர்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள விசேட ஏற்பாடுகள் எதுவுமே மஹிந்தவின் சிந்தனையில் இல்லை. அவருடைய தரப்பிலிருக்கும் முஸ்லிம் தலைமைகள் அவரிடமிருந்து எவற்றை உள்வாங்கப்போகின்றனர்?

தமிழ், முஸ்லிம் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை, பூர்வீக வாழ்விடங்கள் ஆகியன குறித்து தெளிவோ, அக்கறையோ அற்ற ஒரு தலைமையிடமிருந்து நாம் எதனை எதிர்பார்க்கமுடியும்? தேர்தலை வைத்துக் கொண்டு தெற்கிலுள்ள சிங்களவர்களையும், சிறுபான்மையினரையும் துருவப்படுத்தும் முயற்சிகளே இப்போது மேற்கொள்ளப்படுகின்றன. - இவ்வாறு ரவூப் ஹக்கீம் மேலும் கூறினார். (க)

## தமிழர் உணர்வை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு எழுச்சி மாநாடு பற்றி நானும் (இரா.சம்பந்தன் எம். பி.) சக எம். பியான. க.துரைரட்ணசிங்கமும், நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினரும் எடுத்து விளக்கியுள்ளோம். எழுச்சி மாநாடு குறித்த நோக்கம், ஒற்றுமை, மக்கள் பங்களிப்புக்கான அவசியம் மற்றும் பல விடயங்கள் குறித்து விளக்கமாக கூறியுள்ளோம். கடந்த மூன்றரை வருடங்களாக யுத்தம் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக தமிழர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. விசேடமாக ஆழிப்பேரலை சம்பந்தமாக பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது தடைப்பட்டுள்ளது. அரசு-புலிகள் இணக்கம் காணப்பட்டாலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக் கள் அதன் மூலம் பயன்பெற்றுவிடுவார்கள் என்ற அச்சத்தில் பொதுக்கட்டமைப்பு முடக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதிகளினால் தொடுக்கப்பட்ட வழக்கு காரணமாக இந்த நிலை ஏற்பட்டது.

இலங்கை அரசு, அரசியல் ரீதியாக பிரச்சினைக்குத் தீர்வு காணும் என நினைத்து சர்வதேச சமூகம் மேற்கொண்ட முயற்சியும் பயனளிக்கவில்லை.

தமிழ் மக்கள் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், சுதந்திரத்துக்குப் பின் அவர்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப் பட்டனர். தற்போது நடைபெறவிருக்கின்ற தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டின் மூலமாக தமது உணர்ச்சியை வெளிக்கொணர தமிழர்கள் முன் வந்துள்ளனர். அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தலையும் பிரசாரங்களையும் அவற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கும் பிற்போக்கான கருத்துக்களையும் பார்க்கும்போது தமிழ் மக்கள் தமது கருத்தைஎடுத்துச் சொல்லும் வேளையும், தங்கள் உணர்வுகளை வெளிக் கொண்டுவர வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளன என்றே படுகிறது. அதனால் தமிழ்த்தேசிய எழுச்சிமாநாட்டில் ஒவ்வொரு தமிழரும் பங்கேற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மக்கள் குரல் ஒரு கூரையின் கீழ் ஒலிக்கும் போது பலம் அதிகம். பங்கு பற்றும்அனைவருக்கும் போதிய வசதி செய்து தரப்படும். - என்று இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

## ஆளில்லாத வேவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில், கண்டி வீதிக்கு கிழக்கே, நெடுங்கேணி - மாங்குளம் பகுதிகளை அண்டி 9 ஆம் கட்டையில் உள்ள விஞ்ஞானகுளம் மற்றும் மன்னகுளம், கரப்புக்குற்றி ஆகியவற்றுக்கு அருகில் இது விழுந்து நொறுங்கியதாக ஊர்வாசிகள் உறுதிப்படுத்தினர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதையை அண்டிய பிரதேசத்துக்கு மேலாக இது வேவு பார்க்கும் பறப்பில் ஈடுபட்டிருக்கும் போது, புலிகளின் ஏவுகணைகளால் சுடப்பட்டு, நெடுங்கேணிப் பகுதியில் வந்து இது வீழ்ந்திருக்கலாம் எனப் படை உயர்வட்டாரங்கள் சந்தேகிப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

எனினும், அதனைப் பகிரங்கமாகக் கூறுவது படைத் தரப்புக்குச் சிக்கலாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

யுத்த நிறுத்த காலத்தில் புலிகளின் பிரதேசத்துக்கு மேல் பறந்து வேவு நடவடிக்கையில் ஈடுபடுவது யுத்தநிறுத்த மீறலாகக் கொள்ளப்படலாம் என்பதால் அதனை அரசுத் தரப்பு அதிகாரிகள் பகிரங்கமாகக் குறிப்பிட முடியாது என்கின்றன விடயமறிந்த வட்டாரங் கள்.

ஒரு சில அடிகள் மட்டுமே நீளமுடைய, மிகச்சிறிய - பல்லாயிரக்கணக்கான அடி உயரத்தில் பறந்தவாறு வேவு பார்க்கக்கூடிய - உளவு விமானத்தை தரையில் இருந்தவாறு துல்லியமாகக் குறிபார்த்துப் புலிகள் சுட்டு விழ்த்தினார்கள் என்று கூறமுற்படுவது அத் தகைய தாக்குதலுக்கான - உயர் தொழில் நுட்ப - ஏவுகணைகளைப் புலிகள் கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஒப்புக் கொண்ட தாகிவிடும் என்பதால் அதனைப் புலிகளே சுட்டு வீழ்த்தினார்கள் என்ற குற்றச்சாட்டையும் பகிரங்கமாக முன்வைக்க முடியாத நிலை படை அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

1996 இல் இஸ்ரேல் தயாரிப்பான மூன்று ஆளில்லா வேவு விமானங்களையும் அதைத் தரையிலிருந்தபடி இயக்குவதற்கான கருவிகளையும் இலங்கை விமானப்படை கொள்வனவு செய்திருந்தது.

அவற்றில் ஏற்கனவே இரண்டு விமானங்கள் விழுந்து நொறுங்கிவிட்டன. எஞ்சியிருந்த மூன்றாவது விமானமும் இப்போது விழுந்து நொறுங்கியுள்ளது.

இந்த விமானங்கள் அப்போது மூன்று லட்சம் டொலர் செலவில் கொள்வனவு செய்யப்பட்டன என்றும் கூறப்பட்டது.

இந்த ஆளில்லா வேவு விமானம் மூலமே யுத்த நிறுத்த காலத்திலும் வன்னியில் தமது பிரதேசங்களை உளவு பார்த்து யுத்தநிறுத்த மீறலில் அரசுத்தரப்பு ஈடுபட்டு வருவதாகப் புலிகள் குற்றம் சுமத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.